# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

JUNE 2012

81

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
**Board of Governors**
**JUNE 2012**
**CHAIRMAN**
**Dr.N.R. SIVAPATHI**
**Hon'ble Minister Of School Education, Sports and Youth Welfare, Tamil official Language and Culture, Govt. of Tamil Nadu**

**VICE-CHAIRMEN**
**Dr. V.C. KULANDAISWAMY**
Former Vice-Chancellor, Indira Gandhi National Open University, New Delhi.

**VICE-CHANCELLOR**
University of Madras, Chennai.

**VICE-CHANCELLOR**
Annamalai University, Annamalai Nagar.

**VICE-CHANCELLOR**
Madurai Kamaraj University, Madurai.

**VICE-CHANCELLOR**
Tamil University, Thanjavur.

**MEMBERS**

**Dr. F. GROS**
Former Director, French Institute of Indology, Pondichery (IATR-Representative).

**DIRECTOR**
Central Institute of Indian languages, Mysore.

**SECRETARY TO GOVERNMENT**
Tamil Development, Endowment and Information Department, Govt. of Tamil Nadu

**SECRETARY TO GOVERNMENT**
Finance Department, Govt. of Tamil Nadu.

**MEMBER SECRETARY**

**Dr. G. VIJAYARAGHAVAN**
Director, International Institute of Tamil Studies, Chennai.

# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

81

JUNE 2012

Articles in the Journal of Tamil Studies do not necessarily represent either the views of the International Institute of Tamil Studies or those of the Board of Editors

# BOARD OF EDITORS

**Dr. F. GROS**
Former Director, French Institute of Indology, Pondicherry.

**Dr. KAMIL V. ZVELEBIL**
Former Professor of Dravidian Linguistics, University of Utrecht, Holland.

**Dr. G.L. HART**
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.

**Dr. S. AGESTHIALINGOM**
Former Vice-Chancellor, Tamil University, Thanjavur.

**Dr. A. VELUPILLAI**
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

**Editor-in-Chief**
**DR. G. VIJAYARAGHAVAN**

**Associate Editor**
**DR. P. SELVAKUMAR**

## Alas! Passed away the International Spokesman of Dravidian Linguistics!

Prof. Bh. Krishnamurthy *B. 1928) of Andhra Pradesh expired in August last. *In his death the Dravidian Linguistics lost, once and for all, its International* Spokesman for over half-a-century. As the first Tagore Centenary Professor, Bh. K. founded the Department of Linguistics in 1962 at the Osmania University in Hyderabad. Due to his missionary zeal and tireless endeavour that nascent department grew faster and faster so as to blossom into the Advanced Centre for Linguistics around 1978 so much so that Bh. K. was invited to occupy the covetous post of Vice-Chancellor at the infant Central University of Hederabad which he nurtured for full seven years. There too he established another Linguistics Department. The Sahitya Academies, both central and provincial, too utilized his services.

Universities and University - like institutes all over the seven continents vied with one another in inviting Bh. K. to lecture on Dravidian Linguistics.

The scholarly output of Bh.K. is so amazing and staggering that two of his monumental works 'The Telugu Verbal Bases' (Ph.D. thesis) and 'The Dravidian Languages' were published in the USA and UK respectively. The MLBD has been reprinting 'The Telugu Verbal Bases' now and then generously.

Bh. K. was, no doubt, the only Professor of Linguistics in India whose essays and reviews were frequently published in 'Language', the number one global journal in Linguistics. Even at the ripe old age of 84 Prof. Bh. K. kept himself busy in preparing and delivering an endowment-lecture at the Annual Conference of Dravidian Linguistics held at Hederabad in June, 2012.

Prof. Bh. K. displayed profusely his Guru Bhakthi to his Ph.D guide Prof. Emeneau (USA), first by bringing out a commemoration volume when Emeneau crossed the age of 60 and later by financing the publication of Emeneau's papers on Dravidian through the MLBD and, top of all, by the award of D.Litt. to him through the Hyderabad University.

**Prof. A. Kamatchinathan**
Former Director
CAS in Linguistics
Annamalai University

## OUR CONTRIBUTORS


| | |
|---|---|
| **Dr. R. Kothandaraman** | Fellow<br>Central Institute of Classical Tamil<br>IRT Complex, Tharamani<br>Chennai-600 113 |
| **Dr. S.V. Shanmugam** | Former Director<br>Centre of Advanced Study in Linguistics<br>194, Mariappa Nagar<br>Annamalai Nagar-608002. |
| **Dr. S. Manoharan** | Fellow<br>Central Institute of Classical Tamil<br>IRT Complex, Tharamani<br>Chennai-600 113 |
| **Dr. S.Kannan** | Tamil Professor<br>S4, Sri Lakshmi Apartments<br>8, III Cross Street<br>Dhandeeswaran Nagar<br>Velacheri, Chennai-600 042 |
| **Dr. P. Marudanayagam** | Fellow<br>Central Institute of Classical Tamil<br>IRT Complex, Tharamani<br>Chennai-600 113 |
| **Dr. Kiran Kesavamurthy** | South and Southeast Asia Studies<br>University of California, UC. Berkeley |
| **Dr. A. Chandra Bose** | Assistant Professor in History<br>N.H. The Rajah's College<br>Pudukkottai-622 001 |

# CONTENTS


1. இலக்கணவியலும் உரையாசிரியர்களும்

இரா. கோதண்டராமன் 1

2. உடனுறை உள்ளுறை

செ. வை. சண்முகம் 9

3. வழக்குச்சொல் வட்டாரங்களும்
வட்டார வழக்கு அகராதிகளும்

ச. மனோகரன் 28

4. 1. உறுதிக் கணிப்பு
''கலிங்கத்துப் பரணி'' காட்டாத
''கல்வெட்டு''ச் செய்தி

சீனி. கண்ணன் 61

5. Kulothungan's Journey of Man
A Global Vision and a Unique Voice

P. Marudanayagam 64

6. The Dalit Woman and Violence in the
Novels of P. Sivakami

Kiran Kesavamurthy 80

7. Panel Sculptures of Nagaram Balasubrahmanya
Temple Car

A.Chandra Bose 99

# இலக்கணவியலும் உரையாசிரியர்களும்

இரா. கோதண்டராமன்

1. பொதுவாகத் திராவிட மொழிகளிலும் சிறப்பாகத் தமிழிலும் வினைமுற்றுக்கள் பொது வினைமுற்றுக்கள் என்றும் சிறப்பு வினைமுற்றுக்கள் என்றும் இரு வகைப்படும். பொது வினைமுற்றுக்கள் தமிழில் எச்ச வாக்கியங்களில் பயனிலைகளாகச் செயல்படுபவையாகும். இத்தகைய முற்றுவினைகளை மரபிலக்கணிகள் வினையெஞ்சு வினைகள் (=வினை எஞ்ச நிற்கும் வினைகள்) அல்லது வினையெச்ச வினைகள் (=வினையை எச்சமாகக் கொண்ட வினைகள்) என்று குறிப்பிடுவர். வினை எஞ்ச நிற்கும் வினைகள் எச்ச வாக்கியங்களில் தமக்கென எழுவாயைக் கொண்டுள்ளவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக *அவன் வந்து போனான், அவள் பாட வந்தாள்* ஆகிய வாக்கியங்களில் *வந்து* என்பதன் எழுவாய் *அவன்* எனவும் *பாட* என்பதன் எழுவாய் *அவள்* எனவும் குறிக்கப்படும். பொது வினைமுற்றுக்களில் தன்மை முன்னிலையைக் குறிக்கும் இட விகுதிகளும் *ஆண், பெண், பலர், ஒன்று, பல* ஆகியவற்றைக் குறிக்கும் பால் விகுதிகளும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. பழந்தமிழில் பயின்று வழங்கும் *செய்தென, செய்தாங்கு* ஆகிய வாய்பாட்டு எச்சவினைகளில் நிகழும் செய்து வாய்பாட்டு வினைகள் செய்தது வாய்பாட்டு வினைகளாக விளக்கம் பெறத்தக்கவையாகலின் அவ்வினைகள் பொதுவினை முற்றுக்களாகக் கொள்ளத்தக்கவையாகின்றன. கருதுக: *செய்தென, செய்தாங்கு = செய்தது போலச் செய்ததால் / செய்ததுபோல்.*

2. சிறப்பு வினைகள் என்பவை இட விகுதிகளையும் பால் விகுதிகளையும் கொண்டவையாகும். இவ் வினைகள் எழுவாயோடு இசைந்து நிகழ்பவையாகும். பழந்தமிழில் சிறப்பு வினைகள் எச்ச வினைகளாகவும் நிகழும் போக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது. இத்தகைய வினைகளை இலக்கணப் புலவர்கள் முற்றெச்சம் எனக் குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, *தங்கினை சென்மோ* (புறம்.320.15) என்ற வாக்கியத்தில் தங்கினை என்ற சிறப்பு வினைமுற்றெச்சமாகும். இந்த வினையானது *தங்கி* என்னும் பொது வினைமுற்றுக்குரிய இடத்தில் நிகழ்ந்து பின்னதன் தன்மையதாக அமைகின்றது. பொது வினைமுற்றுக்கள் முற்றெச்ச வாக்கியங்களில் (Complex Sentences) நிகழ்பவையாகும். எச்ச வாக்கியத்தில் நிகழும் முற்றெச்ச வினையானது முற்று வாக்கியத்தில் நிகழும் வினையின் பால் இட

விகுதிகளைக் கொண்டவையாகும். முற்று வாக்கியப் பயனிலை வினைமுற்று, எடுத்துக்காட்டாக முன்னிலை ஒருமையதாக இருந்தால் எச்ச வாக்கியத்தில் முற்றெச்சமாக நிகழும் எச்ச வினைப் பயனிலையும் முன்னிலை ஒருமையதாக அமையவேண்டும். தொல்காப்பியம் முற்றெச்சங்களைப் பற்றிப் பேசவில்லையாயினும் *செய்கு, செய்கும், செய்ம்மார்* ஆகிய முற்றுவினைகள் எச்ச வாக்கியத்தில் நிகழும் போக்கினைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இக் குறிப்புகள் கவனமாகக் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும். இந்த வகையில் பின்வரும் நூற்பாக்கள் கருதற்பாலனவாகும்.

1. *(அவைதாம்,)*

அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற வென்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே (தொல்.சொல்.சேனா.202)

2. கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ(டு)
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே (தொல்.சொல்.சேனா.203)

3. அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர் (தொல்.சொல்.சேனா.204)

4. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப (தொல்.சொல்.சேனா.207)

*செய்கும், செய்கு, செய்ம்மார்* ஆகிய வாய்பாட்டு முற்றுவினைகள் எச்ச வாக்கியத்தில் நிகழுமாற்றினைப்பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் ஏனைய சிறப்பு வினைமுற்றுக்களும் முற்றெச்சங்களாக எச்ச வாக்கியங்களில் நிகழவல்லவை என்பதை வெளிப்படையாக எங்கும் குறிப்பிடவில்லை. ஆயினும் சேனாவரையர் செய்கும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றும் எச்ச வாக்கியத்தில் பயனிலையாக நிகழும் பெற்றியது என்று குறிப்பிடுவதால் சிறப்பு வினைமுற்றுக்களும் எச்சவினைகளாக நிகழும் என்பது தெளிவாகின்றது.

3. தன்மைப் பன்மையை உணர்த்தும் *கும், டும், தும், றும்* ஆகிய நான்கு விகுதிகளிலும் உம்மைக் கிளவியானது தன்மைப் பன்மைப் பொருண்மையையும் அதன் முன் நிகழும் *க, ட, த, ற* ஆகியவை எதிர்காலப் பொருண்மையையும் உணர்த்துவதாக ஒரு நிலைப்பாட்டினைத் தொல்காப்பியர் மேற்கொள்ளவில்லை. மேலே குறிப்பிட்ட நான்கு விகுதிகளும் பிரித்து ஆராயத்தக்கனவல்ல என்பது மரபிலக்கணிகளின்

நிலைப்பாடாகும். இவற்றை ஏன் பகுத்து ஆராயக் கூடாது என்பதற்குச் சேனாவரையர் குறிப்பிடும் காரணம் இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும். கருதுக:

> கும்மீறு, வினைகொண்டு முடிதலின், ஒழிந்த உம்மீற்றின் வேறெனவே படும். ட, த, ற, வென்பன எதிர்காலத்திற்குரிய எழுத்தன்மையால், பாலுணர்த்தும் இடைச்சொற்கு உறுப்பாய் வந்தனவெனவே படும். படவே அவற்றை உறுப்பாகவுடைய ஈறு மூன்றாம்; அதனான் உம்மென ஓரீறாக வடக்கலாகாமையின், 'அந்நாற் கிளவியோ' டென்றார்

(தொல்.சொல்.சேனா.202.உரை). சேனாவரையரின் இந்தக் கூற்றினைச் சுந்தரமூர்த்தி (தொல்.சொல்.சேனா.202.விளக்கவுரை) பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்.

> இந்நான்கனுள் முதலில் இருக்கும் கும்மீறு வினைகொண்டு முடியும் சிறப்புடையது. ஏனைய பெயர்கொண்டு முடியும் இயல்பினவாதலின், இதனை வேறு கூறினார். ஏனைய மூன்றிலும் இறுதியில் இருக்கும் 'உம்' மைப் பிரித்துவிட்டால் நிற்கும் ட், த், ற் என்பன காலம் காட்டும் இடைநிலைகளாதல் வேண்டும். அவை காலங்காட்டின் இறந்தகாலம் காட்டும். கும், டும், தும், றும் என்பனவோ எதிர்காலங்காட்டும். ஆதலின் இவற்றையும் உம் என ஓரீறாகப் பிரித்தற்கில்லை. ஆதலால் கும், டும், தும், றும் என நான்கீறாகக் கூறினார். அடுத்த நூற்பாவில் (203) குற்றியலுகரமென ஓரீறாகக் கூறாது கு, டு, து, று என நான்காகக் கூறற்கும் இதுவே காரணமாகும்.

4. கும், டும், தும், றும் ஆகிய எதிர்காலத் தன்மைப் பன்மை முற்றுவிகுதிகளைப் பற்றிய சேனாவரையருடைய கூற்றும் சுந்தரமூர்த்தியின் விளக்கவுரையும் கோட்பாட்டு நிலையில் வலுவானவையாகத் தோன்றவில்லை. இது தொடர்பாக மேற்படி விகுதிகள் *எதிர்வு*, *இறப்பு* ஆகிய இரு காலத்திற்கும் பொருந்தும் என்ற நச்சினார்க்கினியரின் கூற்று (தொல்.சொல்.சேனா.202. சுந்தரமூர்த்தியின் விளக்கவுரை) இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும். கும் ஈற்று வினைமுற்று வினைகொண்டு முடிவதால் டும், தும், றும் ஆகிய ஈற்று வினைமுற்றுக்களினின்றும் அது வேறுபட்டது என்ற கூற்றும் டும், தும், றும் ஆகிய விகுதிகளில் நிகழும் ட, த, ற ஆகியவை எதிர்காலத்திற்கு உரியனவல்ல என்ற கூற்றும் ஏற்புடையனவாகத் தோன்றவில்லை. ட, த, ற ஆகியவை இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரிய கால இடைநிலைகளாகும். கண்டு, கொய்து, சென்று ஆகியவற்றிலும்

உண்டும் (<உண்ணுதும்), வருதும், சேறும் ஆகியவற்றிலும் ட, த, ற ஆகியவற்றின் நிகழ்ச்சியைக் காணலாம். இறந்த கால வினையும் எதிர்கால வினையும் மாறுபட்ட வடிவமைப்பினைக் கொண்டவையாதலால் ட, த, ற ஆகியவை வினையமைப்பின் அடிப்படையில் இறப்பினையும் எதிர்வினையும் உணர்த்துவனவாகக் கொள்வது ஏற்புடையதாகத் தோன்றுகிறது. *உண்டல் (<உ(ண்)ணுதல்), கொய்தல், தின்றல் (<தி(ன்)னுதல்)* ஆகிய செய்தல் வாய்பாட்டு வினைகளில் ட, த, ற ஆகியவை இறவாக்கால விகுதிகளாக நிகழ்வதைக் காணலாம். எனவே *உண்டும், வருதும், சேறும்* ஆகியவற்றில் நிகழும் ட, த, ற ஆகியவற்றை இறவாக்கால விகுதிகளாக இனம் காண்பதில் கோட்பாட்டுச் சிக்கல் இருப்பதாகத் தோன்றவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு *கும், டும், தும், றும்* ஆகியவற்றில் நிகழும் வல்லொற்றுக்களை எதிர்கால விகுதிகளாகவும் எஞ்சியுள்ள உம் என்பதைத் தன்மைப் பன்மை விகுதியாகவும் கொள்வது ஏற்புடையதேயாகும். இவற்றுள் ட, ற ஆகியவை தகரத்தின் திரிபுகளாகும். தெலுங்கில் உம்மைக்கிளவியின் திரிபாகிய *மு* என்பது தன்மைப் பன்மை விகுதியாகும். இந்த வகையில் தொல்காப்பியருடைய ஆய்வினையும் அதனை அரண் செய்வதாக அமையும் சேனாவரையரின் நிலைப்பாட்டினையும் ஏற்புடையவனாகக் கருதுவற்கு வாய்ப்பில்லை. நமது இந்த நிலைப்பாடு *கு, டு, து, று* ஆகிய தன்மை ஒருமை எதிர்கால விகுதிகளுக்கும் பொருந்தும். *உண்கு, உண்டு, வருது, சேறு* ஆகியவற்றில் நிகழும் "*குற்றுகரம் காலவெழுத்துப் பெறுங்கால் உம் மீற்றோடு ஒக்கும்*" என்ற சேனாவரையரின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகத் தோன்றவில்லை. *கு, டு, து, று* ஆகியவற்றில் நிகழும் குற்றுகரத்தை இலக்கண உருபனாகக் கொள்வதற்கில்லை. புணர்ச்சியில் குற்றுகரம் உயிர்முன் கெடும் இயல்பினதாகும். எ-டு. உண்கோ (<உண்கு+ஒ). அது இலக்கண உருபனாயின் உயிர்முன் கெடுவதற்கு வாய்ப்பில்லை. எனவே மேற்படி நான்கு தன்மை ஒருமை விகுதிகளில் நிகழும் வல்லொற்றுக்களை எதிர்கால விகுதிகளாகக் கொள்வதே ஏற்புடையதாகும். அப்படியாயின் தன்மை ஒருமையைக் குறிக்கும் விகுதியாக எதனைக்கொள்வது? இது ஒரு சிக்கலான பிரச்சினை. *கும், டும், தும், றும்* ஆகியவற்றில் உம்மென் கிளவியைத் தன்மைப் பன்மை விகுதியாகக் கொள்ளமுடியுமாகலின் அதற்கு நிகரான தன்மை ஒருமை விகுதி -உன் என அமையும். தெலுங்கில் காணப்படும் தன்மை ஒருமை விகுதியாகிய -னு என்பது -உன் என்பதன் சிதைவாகும். இதனைக் கருத்தில்கொண்டு தமிழிலும் தொடக்கத்தில் -உன் என்பது தன்மை ஒருமை விகுதியாக நிகழ்ந்து, னகரம் கெட்டு எஞ்சிநின்ற உகரம் குற்றுகரமாக நிகழ்வதாகக் கருதலாம்.

5. பழந்தமிழிலும் இடைக்காலத் தமிழிலும் சிறப்பு வினைமுற்றுக்கள் எச்சமாகவும் நிகழும் நிலை காணப்படுகிறது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

1. *அகவினம் பாடுவாம் (கலி.40.1)*
2. *சினவுவென் தகைக்குவென் சென்றனென் (ஐங்.118.3)*
3. *முயங்கினள் பெயர்வோள் (அகம்.198.11)*
4. *துணையிலேம் தமியேம் பாசறையேமே (நற்.341.10)*

இவ் எடுத்துக்காட்டுக்களில் *அகவினம், சினவுவென், தகைக்குவென், முயங்கினள், துணையிலேம், தமியேம்* ஆகிய தெரிநிலை மற்றும் குறிப்பு வினைமுற்றுக்கள் எச்சச் செயற்பாட்டினவாய் நிகழ்வதைக் காணலாம். இவ் வினைகளின் முற்று விகுதிகளும் இவை தழுவும் பயனிலை வினைகளின் முற்றுவிகுதிகளும் ஒரு நிகரனவாகும். இந்த எடுத்துக்காட்டுக்களில் எச்சமாகச் செயல்படும் முற்றுவினைகள் முற்றெச்சம் எனக் குறிக்கப்படும். வினைமுற்று என்ற குறியீடு வினைச்சொல் என்ற ஒரு சொல் வகையை (Lexical Category) குறிப்பதாகும். இதன் செயல்பாடு (Function) வாக்கியச் சூழலுக்கேற்ப இனங்காணப்படும். ஒரு வினைமுற்றானது எழுவாயைத் தழுவி நின்றால் பயனிலையாகவும், வினையைத் தழுவி நின்றால் வினையெச்சமாகவும் அதன் செயல்பாடு அமையும். *செய்கு, செய்கும், செய்ம்மார்* ஆகிய வினைமுற்றுக்கள் பிற வினைமுற்றுக்களைப்போல் பயனிலையாகவும் வினையெச்சமாகவும் நிகழத்தக்கனவாகும். வினையெச்சமாக நிகழ்கையில் இம் மூன்று வினைகளையும் எச்சமாகக் கொள்ளாமல் முற்றாகவே கொள்ளவேண்டும் என்ற மரபிலக்கண நிலைப்பாடு பொதுவினை முற்றுக்களாகிய எச்சவினைகள் சிறப்பு வினைமுற்றுக்களைப்போல் தொடக்கத்தில் பயனிலையாகவும் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று துணியலாம்.

6. *காண்கு வந்தேன்* என்ற வாக்கியத்தில் *காண்கு* என்பதை எச்சமாகக் கருதாமல் வினைமுற்றாகவே கொள்ளவேண்டும் என்ற மரபிலக்கண நிலைப்பாடு கேள்விக்குரியதாகின்றது. *முற்று* என்பது ஒரு சொல் வகையாதலின் இதுவும் இதன் செயல்பாடும் ஒன்றெனக் கொள்ளத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக, முருகன் என்ற மனிதன் பேரனாகவும், தந்தையாகவும், பாட்டனாகவும், ஆசிரியனாகவும் பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டவனாக இருப்பான். இத்தகைய நிலையில் முருகன் என்ற மனிதனும் அந்த மனிதனின் செயல்பாடுகளும் ஒன்றல்ல என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். தொல்காப்பியரும் சேனாவரையரும் முற்றுச்சொல்லையும் அதன் செயல்பாடுகளையும் ஒன்றாகக் கொள்கின்றனர். இத்தகைய நிலைப்பாடு பயனிலை மற்றும் எச்சவினைக் கோட்பாட்டிற்கு மாறுபட்டதாக அமைகிறது. எனவே *செய்கு, செய்கும், செய்ம்மார்* ஆகிய வினைமுற்றுக்கள் தொடர்பான இவர்களின் ஆய்வு கோட்பாட்டு நிலையில் ஏற்கத்தக்கதல்ல. ஆயினும் இவ் வினைகள் வினையைத் தழுவி நிகழும்போதும் வினைமுற்றாகவே கருதத்தக்கவை என்று தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் கருதுவதால்

*காண்கு வந்தேன்* என்ற எடுத்துக்காட்டு இரண்டு முற்று வாக்கியங்களைக் கொண்டது எனக் கருதத் தோன்றுகிறது. இந்த வாக்கியம் *காண்கு யான், வந்தேன் யான்* என்ற தனி வாக்கியங்களின் தொகுப்பாகும். தொடக்கத்தில் முற்று வாக்கியத்திற்கும் எச்ச வாக்கியத்திற்கும் வேறுபாடு இல்லாத ஒரு நிலையை இது சுட்டுகிறது. இந்த வேறுபாடு தவிர்க்கப்பட்ட நிலையில் முற்றெச்ச வாக்கியங்கள் (Complex sentences) தோன்றி நிகழலாயின என்று கருதலாம். *காண்கு யான், வந்தேன் யான்* என்ற இரண்டு வாக்கியங்களும் முற்றெச்ச வாக்கியங்களாக அமைகையில் முதல் வாக்கியத்தில் நிகழும் *யான்* என்னும் எழுவாய் தவிர்க்கப்பட்டு, *காண்கு வந்தேன் யான்* என்ற அமைப்பு தோன்றுகிறது. *செய்கு, செய்கும், செய்ம்மார்* ஆகியவை எச்ச வாக்கியங்களிலும் முற்றாகவே நிகழும் என்று தொல்காப்பியர் வலியுறுத்துவதால் முற்றெச்ச வாக்கியங்கள் தோன்றாத ஒரு நிலையை எண்ணிப்பார்க்கலாம்.

7. "*தத்தம் கிளவி அடுக்குந வரினும், எத்திறத்தானும் பெயர் முடிபினவே*" (சொல்.சேனா.429) என்ற கூற்றின் வாயிலாகத் தொல்காப்பியர் எழுவாயானது பயனிலையைத் தொடர்ந்து நிகழும் என்று வலியுறுத்துவதால் தமிழ் வாக்கியங்கள் தொடக்கத்தில் *செயப்படு பொருள் + வினைப் பயனிலை + எழுவாய்* என்ற அமைப்பினவாக நிகழ்ந்த நிலையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இந்த வாக்கிய அமைப்பு பின்னர் *எழுவாய்+ செயப்படு பொருள்+வினைப்பயனிலை* என்று நிகழத் தொடங்கியதாகக் கருதலாம். ஆயினும் இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் சங்க இலக்கிய வாக்கியங்களில் எழுவாய் நிகழும் இடத்தைப் புள்ளி விவர ஆய்வுக்கு உட்படுத்தியாக வேண்டும். "*எத்திறத்தானும் என்றதனான் உண்டான் சாத்தன், சாத்தன் உண்டான்* என முன்னும் பின்னும் பெயர் கிடத்தலும் கொள்க" (தொல்.சொல்.429) என்று சேனாவரையர் குறிப்பிடுவதால் இத்தகைய ஆய்வு தேவைப்படுகின்றது.

8. இலக்கணக் கோட்பாட்டைப் பொறுத்தவரையில் உரையாசிரியர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரை வகுக்கையில் உரையாசிரியர்கள் அவற்றுக்கு உரைவகுப்பதுடன் அமையாமல் தொல்காப்பியர் கூறாத பல செய்திகளையும் குறிப்பிடும் மரபினைப் போற்றுகின்றனர். எடுத்துக்காட்டாக, *அளபாகு மொழிமுத னிலைஇய வுயிர்மிசை, னஃகான் றஃகா னாகிய நிலைத்தே* (தொல்.எழுத்து.இளம்.122) என்ற நூற்பா *பதிற்றகல், பதிற்றுழக்கு* ஆகியவற்றின் அமைப்பினை விளக்குவதாக அமைந்தாலும் "*நிலைத்து* என்றதனால் பிற வழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க" எனக் குறிப்பிட்டுத் தொல்காப்பியர் குறிப்பிடாத *பதிற்றொன்று, பதிற்றேழு* ஆகிய சொற்களின் அமைப்பினையும் இளம்பூரணர் இந்த நூற்பாவின் வரம்புக்குள் கொண்டுவருகிறார். இதில் குறிப்பிடத்தக்க செய்தியாதெனில் நூற்பாவில் நிகழும் ஏதேனும் ஒரு சொல்லை எடுத்துக்கொண்டு தாம் கூற நினைக்கும் செய்திகளை உரையாசிரியர்கள்

குறிப்பிட்டுச் செல்கின்றனர். மேல் எடுத்துக்காட்டில் நூற்பாவில் நிகழும் *நிலைத்து* என்ற சொல்லைக்கொண்டு இளம்பூரணர் தொல்காப்பியர் குறிப்பிடாத சொல்லமைப்புகளையும் விளக்கிச் செல்கின்றார். *நிலைத்து* என்பதற்கும் இளம்பூரணர் குறிப்பிடும் செய்திகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

9. *மக* என்னும் அகர ஈற்றுப்பெயரானது பதப்புணர்ச்சியில் *மகவின்கை* என இன்சாரியை பெற்று நிகழும் என்ற செய்தியை *மகப்பெயர் கிளவிக் கின்னே சாரியை* (எழுத்து.இளம்.219) என்ற நூற்பாவின் மூலம் புலப்படுத்தும் தொல்காப்பியர் *அத்தவண் வரினும் வரைநிலை யின்றே* (எழுத்து.இளம்.220) என்ற நூற்பாவின் மூலம் *மகத்துக்கை* என்ற தொடரும் வருவிக்கப்படும் என்று குறிப்பிடுகின்றார். *மகப்பால்யாடு, மகம்பால்யாடு* ஆகிய தொடர்களின் அமைப்பைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் இளம்பூரணர் "*அவண்* என்றதனால் *மகப்பால்யாடு* என வல்லெழுத்துப் பேறும் ... *நிலை* என்றதனால் மகம்பால்யாடு என மெல்லெழுத்துப் பேறும் கொள்க" எனக் குறிப்பிடுகிறார். இந்தக் கூற்றின் வாயிலாக மேற்படி நூற்பாவில் நிகழும் *அவண், நிலை* ஆகிய சொற்களின் துணைகொண்டு மகப்பால்யாடு, மகம்பால்யாடு ஆகிய தொடர்களின் தோற்றத்தை இளம்பூரணர் விளக்குகிறார். *அவண், நிலை* ஆகிய சொற்களுக்கும் *மகப்பால்யாடு, மகம்பால்யாடு* ஆகிய தொடர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இச்சொற்களைக் குறிப்பிடாமலேயே இளம்பூரணர் தொல்காப்பியர் குறிப்பிடாத செய்திகளையும் குறிப்பிட முடியும். பல நூற்பாக்களில் இளம்பூரணர் இத்தகைய உத்தியைப் பயன்படுத்துகிறார். பொதுவாக உரையாசிரியர்கள் இந்த நிலைப்பாட்டினையே மேற்கொள்கிறார்கள்.

10. பரிபாடலின் முதற்பாட்டில் *நிழலவை* (=நிழலோய்), *உடையவை* (=உடையோய்), *கொடியவை* (=கொடியோய்), *வளையினவை* (=வளையினோய்), *நேமியவை* (=நேமியோய்), *உருவினவை* (=உருவினோய்), *புகழவை* (=புகழோய்), *மார்பினவை* (=மார்பினோய்) என்ற முன்னிலை ஒருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர்களின் நிகழ்ச்சி காணப்படுகிறது. இதேபோல் இருபத்தோராம் பாடலில் *அட்டவை* (=அட்டோய்), *பெயர்ப்பவை* (=பெயர்ப்போய்), *விரித்தவை* (=விரித்தோய்) ஆகிய முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினையாலணையும் பெயர்களின் நிகழ்ச்சியும் காணப்படுகிறது. இத்தகைய வினையமைப்புகளில் அகரச் சாரியை நிகழ்வதாகவும் இதனைப் பரிமேலழகர் இசைநிறை எனக் கொள்வதாகவும் பொ.வே.சோமசுந்தரனார் குறிப்பிடுவார். இவ் வினைகள் *நிழலினை, உடையினை, அட்டனை, பெயர்ப்பனை* என இன்சாரியையும் அன்சாரியையும் கொண்டு நிகழ்வதே இயல்பானதாகும் எனக் கருதுகிறார் சோமசுந்தரனார். மேலே குறிப்பிட்ட வினையமைப்புகள் *அவ்* என்னும் சாரியையைக் கொண்டனவாகும். ஆனால் பரிமேலழகர், சோமசுந்தரனார் ஆகிய உரையாசிரியர்கள் அவ் என்னும் சாரியையை இனங்காணவில்லை.

ஏனெனில் தொல்காப்பியர் இந்தச் சாரியையின் நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை. தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடாவிட்டாலும் இந்தச் சாரியையின் நிகழ்ச்சியை நாம் தவிர்க்க முடியாது. இதனைக் கருத்தில் கொண்டு *நிழலவை, அட்டவை* ஆகியவற்றின் அமைப்பினை முறையே *நிழல்+அவ்+ஐ, அட்டு+அவ்+ஐ* எனக் கொள்ளமுடியும். இந்த அமைப்பில் நிகழும் ஐகாரம் முன்னிலை ஒருமை விகுதியாகும். இந்த வினையமைப்புகள் *செய்தவன், செய்பவன்* ஆகியவற்றோடு வைத்து ஆராய வேண்டியவை யாகும். வரலாற்று நிலையில் *நிழல்-அவ், அட்டு-அவ்* ஆகியவை பொதுவினைமுற்றுக்களாக நிகழ்ந்திருக்க வேண்டும்.

11. நடப்பியல் மொழியில் காணப்படாத அமைப்பியல் கூறுகளை இலக்கணிகளும் உரையாசிரியர்களும் *அசைச்சொல்* என்றும், *இசைநிறை* என்றும் *பகுதிப்பொருள்விகுதி, சாரியை* என்றும் பலவாறாகக் குறித்துச் செல்கின்றனர். ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம். *(முருகன்) அமர்ந்ததை ... தண்பரங்குன்றம்* (பரி.21.12,15) என்ற வாக்கிய அமைப்பில் நிகழும் *அமர்ந்ததை* என்ற பொது வினையமைப்பில் காணப்படும் ஈற்று ஐகாரம் நடப்பியல் மொழியில் இலக்கண உருபனாக நிகழாமையினால் அதனைப் பரிமேலழகர் *பகுதிப்பொருள்விகுதி* எனக்கொள்வார். இந்த ஐகாரத்தின் நிகழ்ச்சியை *ஆயமடமகளிர் எல்லீரும் கேட்டைக்க* (சிலம்பு.18.49), *எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க எனப்போனான்* (சிலம்பு.19.67) ஆகிய வாக்கியங்களில் நிகழும் *கேடடைக்க, இருந்தைக்க* ஆகிய வியங்கோள் வினையமைப்புகளிலும் காணலாம். இந்த வினையமைப்பில் நிகழும் *ஐக்க* என்ற வடிவம் *ஐக்கு+அ* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் நிகழும் *ஐக்கு* என்ற வினைப் பகுதியானது *ஐ* என்பதன் சார்ந்துருபாகும். *கொடுக்குவர்* (புறம்.182.5) என்ற வினையமைப்பில் *கொடுக்கு* என்பது *கொடு* எனும் வினைப்பகுதியின் சார்ந்துருபாக நிகழ்வதைப்போல் *ஐ* என்பதன் சார்ந்துருபாக *ஐக்கு* என்பது கொள்ளப்படுகிறது. வரலாற்று நிலையில் *ஐ* என்பது இருத்தல் என்ற பொருண்மையதாகும். இதனைக் கருத்தில் கொண்டு *கேட்டைக்க, இருந்தைக்க* ஆகிய வினையமைப்புகளைக் *கேட்பீராக, இருப்பாயாக* என்ற வினைத்தொடர்களின் பொருண்மையனவாகக் கருதலாம். அதாவது *ஆக* என்பதும் *ஐக்க* என்பதும் சார்ந்துருபுகளாகக் கொள்ளத்தக்கனவாகும். இதனின்றும் *அமர்ந்ததை* என்ற பொது வினையமைப்பில் நிகழும் *ஐ* என்பதன் நடப்பியல் வடிவமாக *ஆனது* என்பதைக் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில் *அமர்ந்ததை* என்ற வினைமுற்றினை *அமர்ந்ததானது* என்ற பொருண்மைக்கு நிகராகக் கருதலாம். நடப்பியல் தமிழில் *ஐ* என்னும் வினையின் நிகழ்ச்சி காணப்படாமையால் பரிமேலழகர் அதனைப் பகுதிப்பொருள் விகுதியாகக் கருதுவார். வரலாற்று உண்மைகளை வண்ணனை மொழியியல் ஆய்வில் கருத்தில் கொள்ளமுடியுமா என்பது கோட்பாட்டு நிலையில் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

# உடனுறை உள்ளுறை

செ. வை. சண்முகம்

## 1. முன்னுரை

உடனுறை என்பது உள்ளுறை உவம வகைகளில் முதலாவது. உள்ளுறை உவம வகைகளிலேயே தெளிவுபடாமல் அதிகக் குழப்பத்தோடு இருப்பதும் இதுவே. எனவே இதுவரை ஆராய்ந்தவர்கள் கருத்துகளை விமரிசன நோக்கோடு பார்ப்பதன் மூலம் தெளிவுபெற இங்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

## 2. விளக்கங்கள்

உடனுறை அதாவது உடனுறைவது அதாவது சேர்ந்தே இருப்பது என்பது நேர்பொருள். அது சொல் இலக்கண நோக்கில் பொருள் தொழிற்பெயராய் (verbal derivative) பொருண்மை நோக்கில் தொழில் ஆகுபெயராக வேறு ஒன்றை உணர்த்துவது என்று பொருள். அது உள்ளுறை வகைகளில் ஒன்றாக இருப்பதால் i. கருப்பொருளோடு உடனுறைவது, ii. உடனுறை என்பது இறைச்சியே, iii.குறிப்புப் பொருள் உடனுறைவது என்று மூன்று கருத்துகள் காணப்படுகின்றன. முதல் கருத்தை இளம்பூரணரும், அவரை ஒட்டி, சிவலிங்கனாரும் (1985:12), கந்தசாமியும் (2005:41), இரண்டாவது கருத்தை நச்சினார்க்கினியரும், அவரை ஒட்டி, பாலசுந்தரமும் (1989: 242), மூன்றாவது கருத்தைத் தமிழண்ணலும், அவரை ஒட்டி முத்துசாமியும் (1994:65) மருதநாயகமும் (2004:38) கருத்துரைத்துள்ளார்கள். இவைகளுக்கு மாறாக உரிப்பொருளோடு உடனுறைவது என்ற மாற்றுக் கருத்து இங்கு முன்வைக்கப் படுகிறது.

### 2.1. உடனுறைவது கருப்பொருள்

'உடனுறையாவது உடனுறைவது ஒன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது' என்று இளம்பூரணர் கூறி 'விளையாடு ஆயமொடு' என்ற நற்றிணைப் பாடலை (172) உதாரணமாக எடுத்துக்காட்டி, 'இதனுள் புன்னைக்கு நாணுதும் எனவே, அவ்வழி, தான் வளர்த்த புன்னை என்றும் பல்காலும் அன்னை வருவள் என்று உடனுறை கூறி விளக்கியவாறு' என்று பொருத்திக் காட்டியுள்ளார்.

சிவலிங்கனார் (1985:11) 'புன்னை கருப்பொருள், அது தலைவி தோழியருடன் உறைவது .... எனவே புன்னைச் செய்தி உடனுறை உள்ளுறையாயிற்று' என்று இளம்பூரணர் கருத்தை ஆதரித்துள்ளார். எனவே கருப்பொருள் உடனுறைவது உடனுறை என்பது பெறப்படுகிறது.

கருப்பொருளோடு கதைமாந்தர் உடனுறைவதே என்ற கந்தசாமியின் (2005:40தொ.)[1] கருத்தும் இளம்பூரணர் கருத்தின் தழுவலே. மேலும் அவர் பிற உள்ளுறையிலிருந்து உடனுறை மாறுபடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது

பிற பாடல்களில் உள்ள கருப்பொருள், பாட்டில் இல்லாத கதை மாந்தர்களுக்கு இணையாக அமைந்து, அவர்கள் பாட்டில் குறிப்பிடப்படாமல் திரைமறைவாக இருப்பார்கள். அதனால் கருப்பொருளே கதை மாந்தர்களைச் சுட்டும். ஆனால் உடனுறையில் குறிப்பாக, இந்த நற்றிணைப் பாட்டில் புன்னை ஒரே ஒரு கருப்பொருள். அதற்கு மாந்தர் எவரையும் இணையாகக் குறிக்காமல் வெளிப்படையாகத் தலைவியோடு உள்ள உறவைக் குறிப்பிடுகிறது[2] என்று கூறியுள்ளார்.

அடிப்படையாக இவர்கள் இந்தப் பாட்டில் புன்னை கருப்பொருள் என்று கொண்டது பொருந்தாது என்று பிற்பகுதியில் விளக்கப்படும்.

> 'உடனுறைவது ஒன்றைச் சொல்லப் பிறிதொரு பொருள் தருவது உடனுறை என இளம்பூரணர் கூறுவது வேண்டியது அன்று, உட்பொருள் ஒன்று உடனுறைவது பற்றியது எனவே சாலும்'

என்று இளம்பூரணர் கருத்தை மறுத்துத் தமிழண்ணல் (1986:58) தம் கருத்தை முன்மொழிந்துள்ளதும் சுட்டிக்காட்டத்தகுந்தது. அது பிற்பகுதியில் விளக்கப்படும்.

## 2. 2. இறைச்சி

> 'உடனுறை=நான்கு நிலத்தும் உள்ளதாய் அந்நிலத்து உடனுறையும் கருப்பொருளால் பிறிது பொருள் பயப்ப மறைத்துக் கூறும் இறைச்சி'

என்று நச்சினார்க்கினியர் பொழிப்புரை (பொருளியல். 48) எழுதி, இறைச்சி பற்றிய முதல் இரண்டு சூத்திரங்களில் (சூ.35,36) உதாரணம் காட்டியுள்ளதாகச் கூறியுள்ளார். அதனால் இளம்பூரணர் கருத்தை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஆகிறது.

> 'உடனுறையாவது....இறைச்சியிற் பிறக்கும் உள்ளுறைப் பொருளாம். இவ் உள்ளுறை கருப்பொருளின் பண்பும் செயலுமாகிய இறைச்சியோடு ஒருங்குறைதலின் உடனுறை எனப்பட்டது'

என்ற பாலசுந்தரத்தின் (1989:242) விளக்கம் நச்சினார்க்கினியர் கருத்தை ஆதரிக்கிறது. இந்தக் கருத்தைத் தமிழண்ணலும், கந்தசாமியும் மறுத்துள்ளார்கள்.

### 2.2.1. மறுப்பு

> 'ஒரு கருத்துப் பாட்டுப் பொருளினோடு உடனுறைவது. ஆங்கிலத்தில் குறிப்புப் பொருள் என்பதுபோல மேலோட்டமாக உணரப்படுவது, இறைச்சி அன்று, ஆயினும் இறைச்சி போல் பட்டும் படாமல் தொனிப் பொருளாய் உடனுறையும் குறிப்புப் பொருள்'

என்று தமிழண்ணல் (1986:57) முதலில் நச்சினார்க்கினியர் கருத்தை விமர்சித்துப் பிற்பகுதியில்

> 'நச்சினார்க்கினியர் போல்வார் இறைச்சி எனச் சுட்டிய இடங்கள் பலவும் அவை உயிரினக் கருப்பொருளின் நேயம் பற்றியன ஆகாத இடங்களில் உடனுறை என்றே கருத வேண்டியிருக்கிறது' (ப. 106)

என்றும் கூறும்போது உடனுறை, இறைச்சி ஆகிய இரண்டுக்கும் வேறுபாடு செய்வதில் தெளிவு இல்லை என்று ஒத்துக்கொள்வதை அறியலாம். அதற்குக் காரணம் நச்சினார்க்கினியர் கலித்தொகை 41 பாடல் இறைச்சி உடையதாக விளக்க இவர் உடனுறையாகக் கொண்டதுதான். (விளக்கம் பிற்பகுதியில்).

கந்தசாமி (2005:41) தொல்காப்பியர் இறைச்சியைத் தனியே விளக்குவதாலும் உள்ளுறை வகையாக உடனுறையைக் கொள்வதாலும் 'உடனுறை உவமம் = இறைச்சி' என்று நச்சினார்க்கினியர் கருவதுபோல் கொள்ளமுடியாது[3] என்று தெளிவாகவே குறிப்பிட்டார்.

நச்சினார்க்கினியர் தவிர எல்லோரும் அதாவது இளம்பூரணர் கருத்தைக் கோட்பாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளாதவர்களும் நற்றிணை 172ஆம் பாடலை உடனுறைக்கு உதாரணமாகக் கொடுத்துள்ளது விவாதத்துக்கு உரியதாய் அமைந்துள்ளதால் அந்தப் பாடல் இங்கு ஆராயப்படுகிறது.

**2.2.2. உதாரணப் பாடல்**

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே. (நற்றிணை 172)

(புலவர் பெயர் தெரியவில்லை. நெய்தல் 1.பகற் குறி வந்த தலைமகனைத் தோழி வரைவுகடாயது. 2. குறி பெயர்த்தீடுமாம். பொருள்: ஆயத்தோரோடு புன்னைக் காய் விளையாடிக்கொண்டிருந்தபோது, மறந்து விட்டுச் சென்ற புன்னைக் காய் முளைக்க, அதைப் பால் ஊற்றி வளர்த்ததால் தன்னுடைய தாய், தான் குழந்தையாக இருந்தபோது, அந்தப் புன்னை உன்னை விடச் சிறந்தது ; உன்னுடைய அக்கா என்று கூறுவாள். பாணர் இசையை ஒப்ப வலம்புரிச் சங்குகள் ஒலிக்கும் தலைவனே ! நீ விரும்பினால் வேறு பல நல்ல நிழல்கள் உண்டு).

'இதனுள் புன்னைக்கு நாணுதும் எனவே அவ்வழித், தான் வளர்த்த புன்னை என்றும் பல காலும் அன்னை வருவள் என்று உடனுறை கூறி விளக்கியவாறு காண்க ' என்பது இளம்பூரணர் விளக்கம். கூடுதல் விளக்கமாகச் சிவலிங்கனார் (1985:11) 'அ) புன்னையை அன்னை வளர்த்தாளாதலின் அதைப் பார்க்க அடிக்கடி வருவாள். உங்கள் களவொழுக்கம் வெளிப்பட்டுவிடும். திருமணத்திற்குத் தடையாகும் என்பதே உள்ளுறையும் வேறு பொருள்.ஆ) எனவே புன்னைச் செய்தி உடனுறை உள்ளுறைக்கு உரியதாயிற்று ' என்பார்.

'அன்னை அடிக்கடி வருவாள். அதனால் களவு வெளிப்பட்டுவிடும் என அச்சுறுத்தி இடம் பெயர்த்து உரைப்பாள் போல் திருமணத்திற்குத் தூண்டுவது மறைபொருள். இங்ஙனம் உட்கருத்தாக ஒன்று உடனுறைவதே குறிப்புப் பொருள். இப் பாடலில் புன்னை உடனுறைவது; எனவே அங்ஙனம் உடனுறைவதை ஒன்றைச் சொல்லிப் பிறிதொரு பொருளைத் தருவது உடனுறை என இளம்பூரணர் கூறுவது வேண்டியதன்று. உட்பொருள் ஒன்று உடனுறைவது பற்றியது எனவே சாலும்' என்பது தமிழண்ணல் ( 1986 : 58) விளக்கம். இங்கு இரண்டு கருத்துகள் விவாதத்துக்கு உரியவை: அ) புன்னை ஒரு கருப்பொருள் என்பது, ஆ) பாட்டின் உள்ளுறையாகக் கொண்ட கருத்தான அன்னை அடிக்கடி வருவாள்; காதல் வெளிப்பட்டுத் திருமணத்துக்குத் தடையாகும் என்று அச்சுறுத்துவது, அல்லது திருமணத்துக்குத் தூண்டுவது என்று கூறியது.

இந்தப் பாட்டில் முதல் 7 அடியும் கடைசி 1½ அடியும் உரிப்பொருள், இடையிலுள்ள 2½ அடிகள்தாம் (8, 9, 10வது அடியின் முதல் 2 சீர்கள்.) கருப்பொருள். உண்மையில் புன்னை உரிப்பொருளின் பகுதியாக, காதலர் சந்திக்கும் இடமாக வந்துள்ளது. அம்மா புன்னையை அக்கா என்று கூறியதால் 'அம்ம நாணுதும் நும்மொடு நகையே' என்று முதலில் கூறியதற்குப் பொருள். 'புன்னை நுவ்வை (அக்கா) ஆனதால், அதன்கீழ் நும்மொடு நகையே நாணுதும்' என்பதுதான். அதாவது அக்காவாகிய புன்னைக்குமுன் காதல் செய்வது நாகரிகம் இல்லை என்பதால் 'நாணுதும்' என்று சொல்லிப் புன்னைக்குக் கீழே சந்திக்க மறுக்கிறாள். அது உலக நியதி. ஏனென்றால் காதலர்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள்முன் மகிழ்ச்சியாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள வெட்கப்படுவார்கள். முன்பின் தெரியாதவர்கள்முன்பு காதலைக் காட்டிக்கொள்ளத் தயங்கமாட்டார்கள். எனவே இங்கு உள்ளுறை எதுவும் இல்லை. புன்னை இங்குக் காதலர் சந்திக்கும் இடமாக, சொல் இலக்கணப்படி ஏழாம் வேற்றுமை இடப்பொருளாக அமைந்துள்ளது. அதாவது புன்னைக்குக் கீழ் நும்மொடு நகைக்கு நாணுதும்' என்று பொருள். அதனால் புன்னை இங்குக் கருப்பொருளாகச் செயல்படவில்லை.

தலைவியே மாற்று வழியாக 'நிறைபடு நீழல் பிறவுமாருளவே' என்று சொல்லிவிடுகிறாள். அதாவது நிழல் தரும் பொருள்கள் வேறு இடத்தில் இருக்கின்றன. அதன்மூலம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்று பொருள். நிழல் என்பது நீழல் என்று நெட்டெழுத்து விகாரமாக வந்துள்ளதும் 'பிற' என்ற பன்மையில் வந்துள்ளதும், மர நிழலை அவள் குறிக்கவில்லை என்று புலப்படுத்துகிறது. தெ.பொ.மீ. கூறியபடி (1981:53)) பெற்றோர் தர வரைதல், பொருள் கொடுத்து வரைதல், இல்லையானால் உடன்போக்கு என்ற கருத்துகளை உட்கொண்டது. அப்படி சிலவற்றை வரவழைத்துப் பொருள் கொள்ளலாம்.

மற்றொன்று : பாட்டைக் கவனமாகப் படித்தால் அம்மா புன்னையைக் காட்டிக் கூறிய உண்மையும், தலைவி தலைவனிடம் கூறியதும் தெளிவாகவே உள்ளன. எனவே புன்னை கருப்பொருளும் இல்லை. அங்கு உள்ளுறையும் இல்லை. மாறாக உள்ளுறை உள்ள கருப்பொருளைச் சார்ந்தவை இடையிலுள்ள 2½ அடிகள்தாம் (8, 9, 10வது அடியின் முதல் 2 சீர்கள்.) 'வலம்புரி வான் கோடு நரலும்

இலங்கு நீர் கொண்க' என்றது விளக்கத்துக்கு உரியது. கடலில் உள்ள வலம்புரிச் சங்கு (சங்குகளில் உயர்ந்தது வலம்புரிச் சங்கு) ஓசையிடுவது இயல்பே. இந்த உள்ளுறைக்குள் ஓர் உவமம் உள்ளது. 'விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப' அதாவது புதிய பாணர்கள் இசைக்கும் இசையைப் போன்றது. அதனால் அங்கு இரண்டு சிறப்புகள் புதைந்துள்ளதாகக் கேட்பவரை அல்லது வாசகரைச் சிந்தக்கச் செய்யும். 1. வலம்புரிச் சங்கு. 2. அந்த உள்ளுறைக்குள் இருக்கும் உவமை புதியதாக வந்த பாணரின் மெல்லிய இசை என்பது. எனவே அவை திருமண நாளில் இசைக்கும் இசையை நினைவுபடுத்துவதாகக் கொள்ளத் தோன்றுகிறது. அதனால் நிறைபடு நீழல் ஒரு வகையில் வரைவு கடாதலுக்கு வழி காட்டுவதாக அமைய, அங்குள்ள உள்ளுறையும் ('வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர் கொண்க') உள்ளுறைக்குள் உவமையும் ('விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப') திருமண விழாவை நினைவுபடுத்துவதாக அமைகிறது. அதாவது உரிப்பொருளில்' உள்ள (நிறைபடு) நீழலுக்குக் கருப்பொருள் உள்ளுறையாகத் திருமணவிழாவை நினைவுபடுத்துவதாக அமைந்து புதிய பொருளைத் தருவதால் உடன் உறைகிறது என்று கொள்ளலாம் போலத் தோன்றுகிறது.

### 2.2.3. ஒத்த பாடல்கள்

*...கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ*
*முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து*
*எருவின் நுண்தாது குடைவன ஆடி*
*...இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்*

*(குறுந்தொகை.46)*

*(பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது. பொருள் வாடிய ஆம்பலின் நிறம் போன்ற வீட்டிலுள்ள குருவிகள் முற்றத்தில் உலரும் தானியங்களைத் தின்று மன்றத்தில் பொடியைக் குடைந்து விளையாடித் தங்களுடைய குஞ்சுகளோடு தங்கியிருக்கும், பிரிந்தார்க்குத் துன்பம் செய்யும் மாலையும் தனிமையும் தலைவர் சென்ற நாட்டில் இல்லையா?)*

இந்தப் பாட்டில் குருவி வீட்டில் உள்ளதால் இளம்பூரணர் கருத்துப்படி உடனுறைவதாகவே கருதப்படவேண்டும். ஆனால் அது இறைச்சி உடைய பாடலாகவே கருதப்படுகிறது. (பார்க்க, சண்முகம், 2010 சிறப்பு உள்ளுறை). மேலும் கருப்பொருள் உள்ளுறை உவமமாக அதாவது அடையாக வராமல் உரிப்பொருள் பகுதியாகவே அமைந்துள்ளதும் உள்ளுறை அமைந்த பாடலாகக் கொள்ளமுடியாது என்பதைப் புலப்படுத்திவிடுகிறது. அதுபோலவே ,

**கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்**
**தினைபிடி உண்ணும் பெருங்கன்று நாட**

என்ற குறுந்தொகை (225) அடிகளில் கன்று வீட்டு முற்றத்தில் இருப்பதால் அது உடனுறைவதாகவே கருதப்பட வைக்கிறது. அது உள்ளுறை உவமம் போல

அமைந்த இறைச்சி என்பார் நச்சினார்க்கினியர் (முழு விளக்கத்துக்கு, பார்க்க சண்முகம், 2009 : 24 தொ. ). அகநானூறு 383இல்

வாடினை வாழியோ வயலை நாடொறும்
. .
ஆரநீர் ஊட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை அளியை நீயே

என்ற அடிகளில் வயலை உடனுறைவதாகவே அமைந்துள்ளது. வீட்டிலுள்ள வயலைக் கொடி தலைவி உடன்போக்குப் போனதால் நீர் ஊற்றாமல் வாடியதைப் பார்த்துத் தாய் புலம்புவதைக் குறிக்கிறது. இங்கு வயலைக் கொடி உடனுறைக் கருப்பொருளே. இது தாயின் மனக் கவலையின் பிரதிபலிப்பாகவும் அமைந்துள்ளது. அங்கு உள்ளுறை இல்லை (முழுப் பாடலின் விளக்கத்துக்குப் பார்க்க, சண்முகம், 2003:186தொ.). இப்படிப்பட்ட உதாரணங்களே நச்சினார்க்கினியரை உடனுறை என்பது இறைச்சி என்று எண்ணத் தூண்டியிருக்கவேண்டும். எனவே கருப்பொருள் மாந்தரோடு உட்னுறைவது என்பதும் அது குறிப்புப் பொருள் உள்ளது என்பதும் பொருந்தா.

## 2.3 உட்பொருள் உடனுறைவது

மேலே குறிப்பிட்டபடி,

> 'ஒரு கருத்துப் பாட்டுப் பொருளினோடு உடனுறைவது. ஆங்கிலத்தில் குறிப்புப் பொருள் என்பது போல மேலோட்டமாக உணரப்படுவது......உட்பொருள் ஒன்று சொல்ல உடனுறைவது பற்றியது எனவே சாலும் '

என்பது தமிழண்ணல் (1986:57தொ.) விளக்க வாசகம். 'உட்பொருள் ஒன்று. உடனுறைவது என்ற தமிழண்ணல் கருத்து பொருந்தும்' என்று முத்துச்சாமி (1994: 65) நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார். 'பாட்டின் பொருளுக்குள் மறைந்திருப்பது' என்ற மருதநாயகத்தின் (2004:367) கருத்தும்[4] தமிழண்ணல் கருத்தின் தழுவலே. தமிழண்ணல் காட்டிய உதாரணங்கள் :

தவறில ராயினும் பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி அன்னோள் தோள்உற் றாரே (ஐங்குறுநூறு 177)

(' தலைமகளும் தோழியும் ஒருங்குநின்றுழி இவள் என்னை வருத்துதற்குச் செய்த தவறு என் ?' என்று வினாவிய தலைமகற்குத் தோழி நகையாடிக் கூறியது என்பது துறைக் குறிப்பு. பொருள்: மேலெழும் அலை திளைக்கும் மணல் மேட்டு உச்சியில், கடல்முள்ளி மலர்களின் மணங் கமழும் தொண்டி நகரை ஒத்த இவளை அடைந்தோர் தவறு ஒன்றும் செய்திலர்ஆயினும் நடுக்கம் உற்று வருந்துவர்).

'நெடுங்கோட்டு உச்சியில் முண்டகமலர் கமழும் தொண்டி அன்னோள்' (முண்டகம் என்ற பூவின் வாசனை உடைய தொண்டி என்ற ஊரைப் போன்றவள்) என்ற தொடரில் தலைவியும் நுகர்தற்கு அரியள் என்பதோர் குறிப்பு கிடைப்பது உடனுறையுள் அடங்கும்' என்பது தமிழண்ணல் ( 1986:105 தொ.) விளக்கம். 'இவள் நலத்தால் நீ பனித்து வருந்தினும் கொளற்கு அரியள் எனத் தோழி உள்ளுறையால் அருமை செய்து அயர்வித்தமை காண்க' என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கூறியதைத் தமிழண்ணல் தம்முடைய கருத்துக்குச் சாதகமாக எடுத்துக்காட்டியுள்ளார். இருந்தாலும், இது விவாதத்துக்கு உரியது. ஏனெனில் இந்தப் பாட்டு உரிப்பொருள் மட்டும் உடையது. இங்குள்ள கருப்பொருள் ஏனை உவமமாக அமைந்துள்ளது. அதாவது உரிப்பொருளுக்குள் ஓர் உவமை தலைவியுடைய உடல் அழகை வருணிப்பதாக அமைந்துள்ளது. எனவே இது ஏனை உவமம், உள்ளுறை உவமமாகக் கொள்ளமுடியாது. ஆகையால் அதைத் தொல்காப்பியர் கூறிய உவமை வகைகளில் ' வினை உவமை' ; உவமை நிலைக் களனில் சிறப்புக் காரணம் என்று கொள்ளலாம். அதாவது தலைவி மிக உயர்ந்த நிலை உடையவள் என்று பொருள். அதனால் அவள் அரியர் என்று விளக்கியுள்ளார்கள்.

உண்மையில் 'பனிப்ப' என்பதற்குக் காரணம் அவள் அழகும் செல்வமும் பெற்ற பெண்தான் என்பதுதான். அது 'தொண்டி அன்னோள்' என்ற உவமை மூலம் சுட்டப்பட்டிருக்கிறது. அவன் புலி போன்றவன் என்றால் பிறர் நடுங்குகிறார்கள் என்று பொருள் கொள்வதுபோல அவன் வீரம் உவமை மூலம் புலனாகிறது என்று பொருள். உவமை மூலம் அறியும் பொருளை உள்ளுறை என்று கூறமுடியாது.

'அலைகள் அமைந்துள்ள மணல் முகட்டில் உள்ள கடல் முள்ளி மலர்களின் மணம் கமழும் தொண்டி போன்ற தோள் உற்றோர் பனிப்ப' என்பதால் அரியர் என்ற பொருள் பெறப்படுகிறது. அதாவது இது பொருள் எச்சம் என்ற எச்ச வகையைச் சார்ந்தது.

கலித்தொகை

முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி (கலி.40. 4-5.)

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து
ஏந்து மருப்பின் இனவண்டு இமிர்பூதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால் (கலி.43.1-3.)

என்ற இரண்டு கலித்தொகைப் பாடல் அடிகளைத் தமிழண்ணல் எடுத்துக்காட்டி (1986 ப.105)

'சந்தன உரல், யானைத் தந்தத்தாற் செய்த உரல் இரண்டும் கொண்டு
குற்றுதல் தலைவனை இயற்பழித்தும் இயற்பட மொழிந்தும்
மாறிமாறிப் பாடுதலையும் குறிப்பதால் உடனுறையாகும்'

என்று விளக்கியுள்ளார். இங்கு, இயற்பழிதல், இயற்பட மொழிதல் என்ற பாடல் விளக்கமும், அவை உடனுறை உவமம் என்ற முடிவும் விவாதத்துக்கு உரியவை.

அவர் எடுத்துக் காட்டிய இரண்டு கலித்தொகைப் பாடல்களும் குறிஞ்சிக் கலியில், வள்ளைப் பாட்டு வகையைச் சார்ந்த தோழி கூற்றுப் பாடல்கள். வள்ளைப் பாட்டு என்பது இரண்டு பெண்கள் உரலில் தானியம் போட்டு உலக்கையால் தானியத்தைக் குத்திக்கொண்டே பாடும் நாட்டுப்புறப் பாடல் மரபை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட எழுத்து இலக்கியம். இங்குத் தலைவியும் தோழியும் தலைவியின் காதல் நிகழ்வுகளைப் பேசிக்கொள்வதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

கலிப்பா என்பது தரவு, தாழிசை (ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள்), தனிச்சொல், சுரிதகம் என்ற அமைப்பை உடையவை. அவைகளை உரிப்பொருள், கருப்பொருள் அடிப்படையில் பிரிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இப் பாடல்களில் தரவும், சுரிதகமும், உரிப்பொருள் வருணனைதான். தாழிசைப் பாடல்கள் மலை பற்றியவையாக இருந்தாலும் ஒவ்வொரு தாழிசையிலும் மலை வருணனை சில அடிகளிலிலும், தலைவன் பண்பு சில அடிகளிலிலும் சேர்ந்தே வந்துள்ளதால் அவையும் உரிப்பொருள் வருணனையாகக் கொள்ளலாம் என்றே தோன்றுகிறது.

தமிழண்ணல் காட்டிய அடிகள் தரவில் உள்ளவை. அதாவது உரிப்பொருள் பகுதியில் உள்ளவை. மேலும் உலக்கை இங்குக் கருப்பொருள் அல்ல, உரிப்பொருளாகிய தலைவனைப் பாடுவதற்கு அமைந்த ஒரு கருவி. நச்சினார்க்கினியர் கலி.40 பாடல் உரையில்

> 'மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரல் என்றதனாற் பயன் வரைந்து கோடற்பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும் ; புலால் நாற்றத்தையும் முகத்தையும் உடைய மருப்பாற் செய்த உலக்கை என்றதனாற் பயன் வரைந்து கோடற்குப் பயன் இன்றிப் புகழ்ச்சி மாத்திரையாகத் தோழி இயற்பட மொழிந்ததாகவும் இறைச்சி இடத்தே பொருள் பிறந்தவாறு காண்க..புலால் நாறும் மருப்பு என்றதனால் வரைந்துகோடல் பயவாமையின் இறைச்சி ஆயிற்று.நோய் செய்தான் மலையாய் இருக்கவும் தினை விளைத்துப் பயன் தருகின்ற அதிசயத்தை 'ஏத்தி' எனவே இயற்பழித்தாள் ஆயிற்று'

என்று விளக்கியுள்ளார். உண்மையில் அவை தலைவனுக்கு உரியவை அல்ல, தலைவனைப் பாட அவர்கள் பயன்படுத்தும் கருவி என்பதால் அவர்கள் பெற்றோர்கள் வளத்தின் புலப்பாடு. மேலும் இவ் அடிகளை இயற்பழித்தும் இயற்பட மொழிந்தும் என்று கொண்டு நச்சினார்க்கினியர் இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே என்ற பொருளியல் (36) சூத்திரத்தில் கலித்தொகை 43 பாடலின் முதல் 7 அடிகளை எடுத்துக்காட்டி 'இதனுட் புலவு நாறியும் பூ நாறியும் தீதும் நன்றுமாகிய இறைச்சியாக உலக்கைளால் தலைவனைப் பாடும் பாட்டோடு கலந்த கூறத் தகாத தெய்வத்தையும் பாடுவாம் என்னும் பொருள் பயப்பச் செய்த இறைச்சியின் பொருளே பயந்தவாறும் இரண்டு உலக்கையாலும் பயன்கொண்டாற் போல ஐயன் பேர் பாடுதலால் பயன்

கொள்ளாமையின் உள்ளுறை உவமம் அன்மையும் காண்க' என்று விளக்கியுள்ளார். தமிழண்ணல் அந்தப் பாட்டின் முதல் இரண்டு அடிகளை மட்டுமே எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

சுட்டி

பொருண்மையியலார் குறிப்புப் பொருளை குறியீடு (symbol) சுட்டி (Index= Relation between sign and object), ஒப்பான் (Icon = Representational relation) என மூன்று வகைப்படுத்துவார்கள். அதன்படி சந்தனமும் யானைத் தந்தமும் பெற்றோர் நிலையைச் சுட்டுவதாகக் கொள்ளப்படும். அதனால் சுட்டி என்று ஆகும். ஒருவன் பெரிய பங்களாவில் வாழ்கிறான் என்றால் பங்களா, அதில் வாழும் மனிதனின் செல்வத்தின் சுட்டி. குடிசை, ஏழ்மையின் சுட்டி என்று புரிந்துகொள்கிறோம். மாறாக உள்ளுறையை ஒப்பானாகக் கொள்ளலாம், அதாவது உருவகம். அதை உருவகமாகக் கொள்ளமுடியாததால் உள்ளுறை ஆகாது. எனவே இவ் அடிகளில் உடனுறை உள்ளுறை உள்ளது என்பது விவாதத்துக்கு உரியது.

'இவ்வே பீலி அணிந்து' என்ற புறப்பாடலில் (95) போர்க்கருவிகள் அழகாக இங்கே (அரண்மனையில்) இருப்பதும் அங்கே உருச்சிதைந்து பழுது நீக்குவதற்குக் கொல்லன் குடிசையில் இருப்பதாக வருணிக்கப்பட்டுள்ளன. இங்கு, இரண்டு அரசர்களின் நிலையை-முன்னவன் போர்க் கருவிகளைப் பயன்படுத்தாததால் அழகாகக் காட்சிக் கூடத்திலே இருக்கப், பின்னவன் போருக்குப் போய்க் கருவிகளைப் பயன்படுத்தியதால் கருவிகள் சிதைந்து கொல்லன் பட்டறையில் இருக்கும் நிலை விளக்கப்பட்டு, முன்னவனின் அச்ச உணர்வையும் பின்னவனின் வீர உணர்வையும் சுட்டுகின்றன என்னும்போது அவை சுட்டி ஆகும். ஆனால் ஒரு பொருள் (வேல்) எங்கே ( அரண்மனையில்/ கொல்லன் பட்டறையில் ) எப்படி (அழகாக/ உருக்குலைந்து) இருப்பதை ஒட்டி அதன் உண்மையான சிறப்பு அமையாது; எதனால் ( போரிடாததால்/ போரிட்டதால்) அங்கே இருக்கிறது என்ற முறையில் பின்னதே சிறப்புக்கு உரியது என்பதால் ஒப்பானாகக் கருதவைக்கும். அகப்பாடல்களில் உள்ளுறையாக வரும் கருப்பொருளே ஒப்பானாகக் கருதப்படும். அதாவது உள்ளுறையை ஒப்பானாகக் கொள்வதற்கு ஒரு கட்டுப்பாடு உண்டு. அதாவது, அது கருப்பொருள் பகுதியாக அமைய வேண்டும்.

> செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்று
> அத்த ஓமை அங்கவட் டிருந்த
> இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
> சுரஞ்செல் மாக்கட்கு உயவுத்துணை ஆகும்
> கல்வரை அயலது தொல்வழங்கு சிறுநெறி
> நல்லடி பொறிப்பத் தாஅய்
> சென்றெனக் கேட்டநம் ஆர்வலர் பலரே. (குறுந்தொகை 207)

(செலவுக் குறிப்பு அறிந்து அவர் செல்வார் என்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது. பொருள்: பொருள் ஈட்டுவதற்காக வெளிநாடு) சொல்லிவிட்டுச் சென்றால் பயணம் தடைப்படும் என்று கருதி, பாலை நிலத்திலுள்ள ஓம

மரக்கிளையில் உள்ள இனத்திலிருந்து பிரிந்து வந்த பருந்து தன்னுடைய தனிமையை வெளிப்படுத்தும் ஓசை அந்த வழியே போகும் மனிதர்களுக்கு உசாத் துணை ஆகும் மலைக்குப் பக்கத்தில் பழைய பாட்டையில் காலடி வெயிலால் சுடச் சென்றார் என்று கேள்விபட்ட அனுதாபிகள் பலர்).

ஆபிரகாம் அருளப்பன் உடனுறைக்கு எடுத்துக்காட்டிய பாடல் என்று இந்தப் பாடலைக் குறிப்பிட்டுத் தமிழண்ணல் ( 1986 : 59)

> 'தலைவர் கல் சூழ்ந்த வழியில் நடந்து விரைந்து சென்றதாகக் கேட்ட தோழி போல்வார் எவரும் அவரைத் தடுத்து நிறுத்தவில்லையே என்பது உடனுறையும் உள்ளுறையாகும் என்பது அவர் கருத்து'

என்று விளக்கியுள்ளார். அருளப்பன் கொடுத்த விளக்கமான 'தலைவர் கல் சூழ்ந்த வழியில் நடந்து விரைந்து சென்றதாகக் கேட்ட தோழி போல்வார் எவரும் அவரைத் தடுத்து நிறுத்தவில்லையே' என்பதைச் 'சென்றெனக் கேட்ட நம் ஆர்வலர் பலர் ' என்பதன் சொல் எச்சமாகவே கருதவேண்டும். 'தலைவர் சொல்லாமற் பிரிந்து செல்வதைத் தோழி கூறியபொழுது

> 'இங்ஙனம் சொல்லிய ஆர்வலர் பலர்; அவரைப் போல நீயும் சொன்னாய் தலைவரைத் தடுத்தாய் இல்லை என இரங்கிச் சொல்லியது'

என்று உ.வே. சா. பாட்டின் முன்னுரையிலும்,

> என்பால் அன்புடையார் பலர் கேட்டு இதனை எனக்கு முன்னரே தெரிவித்தனர். நீ இப்பொழுது தெரிவித்தலால் ஆகும் பயன் யாது? எல்லோரையும் போல நீ கேட்டலை யன்றிச் செலவழுங்குவித்தாய் அல்லை' எனத் தோழியின் நொதுமல் தன்மையைச் சுட்டித் தலைவி இரங்கினாள்'

என்று விளக்க உரையிலும் கூறுவதால் 'சென்றெனக் கேட்ட நம் ஆர்வலர் பலர்' என்பதால் பெறப்படும் கருத்து என்று ஆகிச், சொல் எச்சம் ஆகும். அதாவது 'எல்லோரையும் போல நீ கேட்டலை யன்றிச் செலவழுங்குவித்தாய் அல்லை' என்று தோழி சொல்லவேண்டிய கருத்து பெறப்படுவதால் சொல் எச்சம் ஆகும்' உள்ளுறை அல்ல. மாறாக இந்தப் பாடலை இறைச்சியாகக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தகுந்தது.

இதில் முதல் அடியும் 6வது 7வது அடிகளும் உரிப்பொருள். 5வது அடி முதல் பொருள் அதாவது நிலம். அது தலைவன் சென்ற வழி என்ற முறையிலும், கருப்பொருளாகக் கருதத்தகுந்த பருந்தின் செயல் நடக்கும் இடம் என்ற முறையிலும் அமைந்துள்ளது. தலைவன் சென்ற வழி என்ற முறையில் பருந்து, தன் இனத்திலிருந்து பிரிந்து துன்புறுவதாக வந்துள்ளதை, இறைச்சியாகத் தலைவின் நிலையை உணர்ந்து தலைவனுக்குச் செயல் ஊக்கம் உணர்த்துவதாகக் கொள்வதே பொருந்தும்.

இதுவரை பார்த்ததில் உடனுறைக்கு உரிய சரியான உதாரணம் காணப்படவில்லை என்றே தோன்றுகிறது. அதற்குப் பாட்டில் கருப்பொருள் எது என்று கண்டறிவதில் தெளிவு இல்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. அதற்கு மூன்று முக்கியக் காரணங்கள் : 1. பாட்டை உரிப்பொருள் பகுதி, கருப்பொருள் பகுதி எனப் பகுத்துப் பார்க்காதது, 2. தொல்காப்பியர் கருப்பொருளைப் பட்டியல் போட்டுக் கூறியிருந்தாலும் பாட்டில் கருப்பொருள் என்ன என்று அடையாளம் காணுவதில் தெளிவு ஏற்படவில்லை. அதனால் பாட்டில் உரிப்பொருள் பகுதியில் வரும் கருப்பொருள்களைப் பாட்டின் கருப்பொருளாகக் கருதி உள்ளுறை உவமம் கொள்வது, 3. உள்ளுறையாகக் கருதத் தகுந்த கருப் பொருளாகக் கருதும் பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு விளக்கம் கொடுத்து அந்தப் பாட்டில் உள்ள உரிப்பொருள் பகுதியோடு இணைத்துப் பார்க்காதது. அதனால் குறிப்பெச்சமாக அமைவதையும் உளளுறையாகக் கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது.

## 2.4. உரிப்பொருளோடு உடனுறைவது

உரிப்பொருளில் கூறிய செய்தி, நாடன், துறைவன், கொண்கன் போன்ற சொற்களுக்கு அடையாக வந்த கருப்பொருள் பகுதி உள்ளுறை உவமமாக அமைந்து, உவமானமாகப் பொருள் கொள்ளும்போது, பாட்டின் திரள் பொருள் ( Proposition) முற்றுப்பெறுவதாக அமைவதை உடனுறைவது என்று கொள்ளலாம் போலத் தோன்றுகிறது. அப்படி அடையாக வரும் கருப்பொருள் பாட்டின் திரள் பொருள் கருத்தை உவமையாகவோ, சிறப்பிப்பதாகவோ, விளக்குவதாகவோ அமைவது பிற வகை உள்ளுறையாக அமையும்.

உதாரணப் பாடல் 1

கரும்புநடு பாத்தியிற் கலித்த தாமரை
சுரும்பு பசி களையும் பெரும்புனல் ஊர
புதல்வன் ஈன்றஎம் முயங்கல்
அதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே (ஐங்குறுநூறு 65)

(மருதம். கிழத்தி கூற்றுப் பத்து. ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது. பொருள் கரும்பு நட்ட பாத்தியில் தானே வளர்ந் தழைத்த ஆம்பல் வண்டின் பசியைப் போக்கும் ஊரனே. குழந்தை பெற்ற என்னை முயங்காதே, உன் அழகு கெட்டுவிடும்).

பேராசிரியர் ( உவமையியல் 25) வினையுவமப்போலிக்கு உதாரணமாகக் கொடுத்த பாடல் இது.

'தாமரையினை விளைவிப்பதற்கு அன்றி, கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள், தானே வளர்ந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கும் ஊரன் என்றாள். இதன் கருத்து காதற் பரத்தையர்க்கும் இற்பரத்தையர்க்கும் என்று அமைக்கப்பட்ட கோயிலுள் யாமும் உளவாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம். அது போல என்பது ஆகலான் உவமைக்குப் பிறிது ஒரு பொருள் எதிர்ந்து உவமம் செய்யாது ஆண்டுப் பிறந்தனவற்றோடு நோக்கிக் கருத்தினால் கொள்ள வைத்தலின் இஃது உள்ளுறை

உவமம் ஆயிற்று. அவற்றுள்ளும் சுரும்பு பசி களையும் தொழிலோடு விருந்தோம்புதல் தொழில் உவமம் கொள்ள நின்றமையின் வினைஉவமப் போலி ஆயிற்று....... அல்லாக்கால், 'கரும்புநடு பாத்தியிற் கலித்த தாமரை/சுரும்பு பசி களையும் பெரும்புனல் ஊர' என்பது பயம் இல கூறலாம் என்பது' என்பது பேராசிரியர் விளக்க வாசகம்.

தமிழண்ணலும் (1986: 44) உள்ளுறையை விளக்கும்போது பேராசிரியரை ஒட்டி இந்தப் பாடலை வினையுவமப் போலிக்கு உதாரணமாகக் கொடுத்து அதே விளக்கத்தைக் கொடுத்துள்ளார். இங்குப் பரத்தை வீட்டில் தலைவி போய்த் தங்கியிருந்து தன் கடமையைச் செய்கிறாள் என்று விளக்கிய பெண்களின் சமூக நிலையும் விவாதத்துக்கு உரியது.

சமூக நிலையைப் பொறுத்தவரையில் நற்றிணைப் பாடல் ஒன்றில் ( 330) 'யாணர் ஊர நின் மாணிழை மகளிரை எம்மனை தந்து நீ தழீஇயினும்' என்று வந்துள்ளதே தவிரப் பரத்தையர் வீட்டில் தலைவி போய்-இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் கருத்துப்படி கரும்பு நடு பாத்தி = காதற் பரத்யைர் வீடு, தாமரை = தலைவி, சுரும்பு = விருந்தினர், பசி களைதல் = தலைவி விருந்தோம்புதல். கரும்பு நடு பாத்தி = தலைவி வாழும் வீடு, தாமரை = பரத்தை, சுரும்பு = தலைவன், பசி ஆறும்= தலைவி குழந்தை பெற்றுள்ளதால் தன்னுடைய காமப் பசியைப் பரத்தை ஆற்றுதல்.

பாட்டில் முதல் இரண்டு அடிகள் கருப்பொருள் உள்ளுறை உவமமாக அமைந்துள்ளன. ஏனென்றால் அது 'ஊர' (ஊரன் என்பதன் விளி வடிவம்) என்பதற்கு அடையாக வந்துள்ளது. கடைசி 2 அடிகள் உரிப் பொருள். கருப்பொருள் மூலம் உள்ளுறை எப்படி உரிப்பொருள் பகுதியோடு பொருந்தும் என்று விளக்காததும் குறையே. பரத்தை வீட்டில் தங்கி விருந்தினர்களை ஓம்பும் தலைவி புதல்வனைப் பெற்றதால் தன்னைத் தழுவவேண்டாம் என்று சொல்வது எப்படி பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது.

உரிப்பொருளாக அமைந்த கடைசி 2 அடிகளில், தலைவி குழந்தைப் பேற்றால் தன் மார்பு சிதைந்துவிடும் என்று முயங்கவேண்டாம் என்று கூறுவது உண்மையான காரணம் அல்ல. கரும்பு நட்ட பாத்தி = தலைவி வீடு, அதில் தாமரை முளைத்துள்ளது பரத்தை வந்து வீட்டில் தங்குவது. சுரும்பு=தலைவன், அவன் காமப் பசியைத் தாமரையாகிய பரத்தையைச் சேர்கிறான். தலைவி ஊடலுக்கு அவள் வெளிப்படையாகக் கூறியது காரணம் ஒன்று (குழந்தைப்பேற்றால் தலைவன் முயங்கினால், பால் பட்டு மார்பு சிதையும்), கருப்பொருள் வாயிலாகக் கூறிய உள்ளுறை உவமத்தில் கூறும் காரணம் மற்றொன்று. கரும்பு நட்ட பாத்தியில் (தன் வீட்டில்) முளைத்த தாமரை ( வீட்டுக்கு வந்த பரத்தை) வண்டின் (தலைவனின்) பசி களையும் (காம உணர்வைத் தணிக்கும்) அதுதான் முக்கியக் காரணம். அதாவது உரிப்பொருளின் சரியான புரிதலுக்குத் துணையாக உடனிற்பது என்ற முறையில் உடனுறை உவமம் என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

*உதாரணம் 2*

*அமிழ்தம் உண்கநம் அயலி லாட்டி*
*பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு*
*நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை*
*நெல்லி யம்புளி மாந்தி அயலது*
*முள்ளில் அம்பணை மூங்கில் தூங்கும்*
*கழைநிவந் தோங்கிய சோலை*
*மலைகெழு நாடனை வருமென் றோளே. (குறுந்தொகை 201)*

(புலவர் பெயர் தெரியவில்லை. கடிநகர் வேறுபடாது நன் ஆற்றினாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. பொருள்: தன் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள பெண் அமிழ்தம் உண்பாளாக. (காரணம்) வௌவால் முதலில் இனிய மாம்பழத்தையும் பின்னர்ப் புளித்த நெல்லிக் காயையும் தின்றுவிட்டு, மூங்கில்கோல்கள் வளர்ந்துள்ள சோலையில் உறையும்; அச்சோலையை உடைய நாடன் வருவான் என்று சொன்னாள்).

இங்கு முதல் அடியும் கடைசி அடியும் உரிப்பொருள். இடையிலுள்ள 5 அடிகள் கருப்பொருள். கருப்பொருள் வருணனை நாடன் என்பதன் அடையாக அமைந்துள்ளது. 'நாடனை வரும்' என்ற தொடருக்கு உ.வே. சா.வும் அவரை ஒட்டி சோமசுந்தரனாரும் ' தலைவன் வரைவுக்கு உரியவற்றோடு வருவான்' என்று உரை எழுதியதோடு,

> தேமாம்பழத்தை உண்ட வௌவால், பின்பு மாறுபட்ட சுவையையுடைய நெல்லிக் காயை உண்டு, சிறிதும் ஊறு உண்டாக்காத மூங்கிலில் தூங்கியது போலக் களவுப் புணர்ச்சியின்கண் இன்பம் துய்த்த தலைவன் அவ்வின்பத்துக்கு மாறாகிய இடையீடுகளையும் ஏற்றுப் பின், வரைந்துகொண்டு சிறிதும் ஏதம் இன்றி இன்பம் துய்க்கும் நிலையினன் என்பது குறிப்பு

என்பது உ்.வே. சா. விளக்கம். அவர் குறிப்பு என்பதைச் சூழலுக்கு ஏற்ப உள்ளுறை/ இறைச்சி என்று கொள்ள வேண்டும். மாறாக 'இனிப்பும் புளிப்பும் கலந்து உண்டது என்றது தலைவன் களவு ஒழுக்க நிகழ்ச்சியைக் குறித்து ஓதியது என்க. 'முள்ளில் அம்பணை மூங்கிலிற் துஞ்சும்' என்றது இப்பொழுது வரைந்து கொண்டு துன்பம் இல்லாத தன் மனையிலே இன்புற்று உறைகிறான் என்றவாறு' என்று சோமசுந்தரனார் (ப.293) விளக்கும்போது எந்த முறையில் அந்தப் பொருள் கொண்டார் என்பது பற்றி குறிப்பு இல்லை. அது முடிவு செய்ய முடியாத நிலையைக் காட்டுகிறது.

இருவருடைய விளக்கப்படி, தலைவன் ஏதோ சிறு தவறு செய்தாலும், இல்லற வாழ்வு வாழ விருப்பம் உடையவனாகவே காணப்படுகிறான். அப்படியானால் தலைவி மிகவும் உணர்ச்சிவயப்படுபவளாக அமைகிறாள்.

'அமுதம் உண்க' எனறு கூறியதன் பொருள் நுட்பத்தையும் கருப்பொருளையும் கவனமாகப் பார்த்தால் வேறு விதமான முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஒருவர் அளவு கடந்த மகிழ்ச்சியாகவோ அல்லது வருத்தமாகவோ இருக்கும்போது அளவு கடந்து புகழ்வார்கள் அல்லது இகழ்வார்கள் என்பது ஓர் உளவியல் உண்மை. அதனால் அதிகமாகப் புகழ்ந்தால் பேசுபவர் அதிக மகிழ்ச்சி நிலையில் இருக்கிறார் என்று பொருள். எனவே தலைவி 'அமிழ்தம் உண்க அயிலிலாட்டி' என்று கூறியது அவளுடைய மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தின் மொழிப் புலப்பாடு. அதற்குக் காரணம் என்ன? தலைவன் வரைவுடன் வருதல் என்பதுதான், என்றாலும் அதற்காக அப்படி சொன்னாள் என்றால் தலைவி வெறும் உணர்ச்சிவயப் பட்டவள் என்று ஆகும். ஆனால் கருப்பொருள் வருணனை பார்த்தால் தலைவன் காதலிக்கும் காலத்திலேயே முழுவதும் நல்லவனாக இல்லாமல் இருந்தவன் திருந்தி, மணத்துக்கு ஏற்பாடு செய்கிறான். அதை அடுத்து வீட்டுப் பெண் கூறும்போது தன்னுடைய திருமணத் தகவலோடு அவன் திருந்திய தகவலும் உள்ளடங்கியிருப்பதால் அவள் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறாள். அதனால்தான் அடுத்த வீட்டுப் பெண் அமுதம் உண்க அளவுக்கதிகமாக வாழ்த்துகிறாள். உ.வே. சா. சோமசுந்தரனார் ஆகிய இருவர்களின் கருத்துப்படி வெளவால்=தலைவன். இனிய மாம்பழம் உண்டல்=தலைவியை அனுபவித்தல். புளிப்பு நெல்லிக் காய் உண்டல் = இன்பத்துக்கு மாறாய இடையீடு (உ.வே.சா.). இனிப்பும் (மா) புளிப்பும் கலந்துண்டது=தலைவன் களவு ஒழுக்க நிகழ்ச்சி (சோமசுந்தரனார்). மூங்கிலில் தூங்குவது=தலைவன் வரைந்துகொண்டு ஏதம் இன்றி இன்பம் துய்ப்பது (உ.வே.சா.) இப்பொழுது வரைந்துகொண்டு துன்பம் இல்லாத தன் மனையி'லே இன்புற்று உறைதல் ( சோமசுந்தரனார்) .

இந்த விளக்கத்தில் இரண்டு சந்தேகங்கள் எழுகின்றன : 1) இந்த விளக்கப்படி தலைவன் நல்லவனே. காதலிக்கும் போது இடையில் ஏதோ துன்பத்தை அனுபவித்தாலும் இறுதியில் மணம் செய்து மகிழ்ச்சியாக இருக்கிறவன் என்றால் தலைவி மணச் செய்தி சொன்னவளை அமிழ்தம் உண்க என்று சொன்னது மிகை ஆகும். 2) மாம் பழம் தின்பதைத் தலைவியை இன்பம் துய்த்தல் என்று சொல்லிவிட்டு அதைத் தின்ற பிறகு புளிக்கும் நெல்லிக்காயைத் தின்றது இன்பத்துக்கு வந்த இடையீடு என்றோ வெறும் களவொழுக்க நிகழ்ச்சி என்றோ கொள்வது பொருத்தமாகப் படவில்லை. சங்க இலக்கிய மரபுப்படி அதைப் பரத்தைத் தொடர்பு என்று கொள்ளத் தோன்றுகிறது. அப்படியே மூங்கிலில் தூங்குவது என்பது அவன் வரைந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அலட்சியமாக வீட்டில் இருப்பது ஆகும். அப்பேர்ப்பட்டவன் திடீரெனத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய, அதை அறிந்த அடுத்த வீட்டுப்பெண் தலைவன் மணம் செய்ய வரப்போகிறான் என்று சொல்லும்போது, தன்னுடைய திருமணச்செய்தி தலைவிக்கு- தலைவன் நடத்தையும் அலட்சியமும் அறிந்தவளுக்கு, அவைகளை ஒழித்துவிட்டான் என்ற செய்தியும் உள்ளடங்கியிருப்பதால்தான் அவளை அமிழ்தம் உண்க என்று அளவுக்கு அதிமாக வாழ்த்தத் தோன்றியிருக்க வேண்டும். அதாவது 'அயிலிலாட்டி நாடனை வருதும்' என்று சொன்னாலும் அவன் மேல் இருந்த அவநம்பிக்கையைப் போக்கியதே அந்த மகிழ்ச்சியைப் பல மடங்காக்கியதால்தான் 'அமுதம் உண்க' என்று சொல்ல வைத்திருக்கவேண்டும்.

உரிப் பொருள் செய்தியாகத் தலைவி 'அமிழ்தம் உண்க' என்று கூறியதில் தலைவி அளவுக்கு அதிமாக அடைந்த மகிழ்ச்சி புலனாகிறது. ஏனெனில் அவள் சொன்ன செய்தியில் நேரடிச் செய்தியான தன்னுடைய திருமணத் தகவலும், அதில் புதைந்துள்ள தலைவன் முன்பு ஓரளவு தீய பழக்கம் உடையவன் திருந்திவிட்டான் என்ற உண்மையுமே அதிக மகிழ்ச்சிக்குக் காரணம். கருப்பொருள் செய்தி உள்ளுறை உவமமாகத் தலைவன் ஓரளவு தீயவன் என்று சொல்ல, உரிப் பொருள் செய்தியாகத் தலைவன் நாளை 'வரும்' என்று கூறியது தலைவன் திருந்திவிட்டான் என்ற கூடுதல் உண்மையும் புலப்படுத்துவதால் 'வரும்' என்று சொன்னவளை 'அமிழ்தம் உண்க' என்று வாழ்த்துகிறாள். அதாவது கருப்பொருள் செய்தி உடனுறைந்து உரிப்பொருளின் ஆழத்தைப் புரிய வைப்பதால் உடனுறை உவமம் ஆகுகிறது.

*உதாரணம் 3*

அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்டுறை ஊரன் பெண்டினை ஆயிற்
பலவா குகநின் நெஞ்சிற் படரே
ஓவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சும் நாளே. (குறுந்தொகை 91)

(பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைமகன், வாயில்வேண்டிப் புக்கவழித் தன்வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது 2) பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதூஉம் ஆம்). பொருள்: பிரப்பம் பழத்தை ஆழமான குளத்திலுள்ள கெண்டை மீன் கவ்வுதற்கு இடமான துறையை உடைய ஊரனுக்கு மனைவியானால் நின் உள்ளத்தில் துன்பம் பல ஆகுக. அஞ்சி என்பான் போர்க் களத்தில் உள்ள ஊரார் இரவு தூங்காத நாட்கள் சில ஆகுக).

இங்கு முதல் 2½ அடிகள் கருப்பொருள், ஏனைய 5½ அடிகள் உரிப்பொருள். உரிப்பொருளில் ஓர் உவமை உள்ளது. உரிப்பொருளில் தலைவி துன்பம் மட்டுமே விளக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கருப்பொருளில் உள்ளுறை உவமமாக உள்ளது.

> 'பிரம்பினிடத்தே காய்த்துப் பழுத்து முதிர்ந்த கனியை எளிதில் கெண்டை பெறும் ஊரன் என்றது தன்னுடைய சிறப்பால் அன்பும் செல்வமும் முதிர்ந்த தலைவனைப் பரத்தையர் எளிதற் கவர்வர் என்னும் குறிப்பினது'

என்பது உ.வே. சா. விளக்கம். அவர் உள்ளுறை, இறைச்சி என்று வேறுபடுத்தாமல் எல்லா இடத்திலும் குறிப்பு என்று எழுதுவதால், நாம் அதை உள்ளுறை என்று கொள்வதில் தவறு இல்லை.

'நிலத்தில் தோன்றிய பிரப்பங் கனியை நீரில் வாழும் கெண்டை தின்னும் என்றது குடியிற் பிறந்த தலைவனைக் குடிப் பிறப்பில்லாப் பரத்தையர் நுகர்கின்றனர் என்றவாறு. தண்டுறை= குளிர்ந்த நீர்த்துறை. பரத்தையரோடு ஆடுவதற்குரிய நீர்த் துறை பலவும் உடைய என்று இகழ்ந்தவாறு'

என்பது சோமசுந்தரனார் விளக்கம். உள்ளுறை, குறிப்பு என்று வேறு பல பாடல்களில் குறிப்பிட்டு எழுதியவர் இங்கு ஏன் சிறப்பாக ஒன்றும் குறிப்பிடவில்லை என்று தெரியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் உள்ளுறை பற்றிய தெளிந்த அறிவு ஏற்படாததுதான். இருந்தாலும் அவருடைய விளக்கமும் கருப்பொருளை உள்ளுறை உவமமாகக் கொள்வதற்குத் துணைபுரிகிறது. அதாவது தலைவி துன்பத்துக்குக் காரணம் தலைவன் பரத்தமையே நிலத்தில் தோன்றிய பிரப்பங் கனியை நீரில் வாழும் கெண்டை தின்னும் என்று கருப்பொருளில் உள்ளுறை உவமமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது உரிப்பொருள் காரியத்துக்குக் கருப்பொருளில் காரணம் கூறப்பட்டிருக்கிறது. அப்போதுதான் பொருள் முழுமை அடைவதால் உடனுறை உவமம் என்று கொள்ளத் தோன்றுகிறது.

நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கெண்டை ஆழமான குளத்தில் இருப்பது பாட்டில் உள்ளது. பிரப்பங் கொடி பற்றிய குறிப்பு இல்லாவிட்டாலும் உலக அறிவால் பிரப்பங் கொடி நிலத்தில் இருப்பது கருத்து வேறுபாட்டுக்கு இடம் இல்லை. எனவே சோமசுந்தரனார் கூறிய 'நிலத்தில் தோன்றிய பிரப்பங்கனியை நீரில் வாழும் கெண்டை தின்னும் என்ற முரண் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. அதற்கு மேலாக நாம் கெண்டைக்குப் பழம் எப்படி கிடைத்தது என்பது முக்கியமான கேள்வி. குளம் அருகில் இருந்தால் பழம் குளத்தில் விழும். தலைவன் பரத்தையைத் தேடிப் போனான். போன பிறகு பரத்தை அவளைத் தக்கவைத்துக்கொண்டாள் என்பதற்காகப் பரத்தையைக் குறை கூறுவது பொருந்தாது. அது சமூகக் குற்றம். எனவே அந்தச் சமூகத்தில் வாழும் குடும்பப் பெண்களின் நிலையை விளக்குவதாகக் கொள்ளலாம்.

*உதாரணம் 4*

வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சி சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே (ஐங்குறு. 1)

(மருதம். வேட்கைப் பத்து. தோழி கூற்று. பல நாள் புறத் தொழுக்கத்தில் ஈடுபட்டுத் திரும்பிவந்த தலைவனிடம் தோழி நகையாடிக் கூறியது இது. பொருள். அரசன் வாழ்க, நெல் விளைக, பொன் வருவாய் மிக உண்டாகுக எனத் தாய் வேண்டினாள். நாங்கள் பூக்களையுடைய காஞ்சியும் முட்டைகளையுடைய சிறுமீனும் மிகுதியாக வருவாய் உடைய எங்கள் ஊரன் வாழ்க, பாணனும் வாழ்க என்று வேண்டினோம்).

தமிழண்ணல் (2007:83தொ.) பிற்குறிப்பை ஒட்டி, இந்தப் பாடல் நகை உள்ளுறை என்று விளக்கியுள்ளார். ஔவை துரைசாமிப் பிள்ளை 'இதில் வாழ்த்துவது ஏதம் அஞ்சி மங்கல மொழியால் வாழ்த்துதல்' என்று கூறுவதை மேற்கோள் காட்டி, நகை உள்ளுறை என்று கருதலாம் என்றும் விளக்கியுள்ளார்.

' நனைய காஞ்சி சினைய சிறுமீன் யாணர் ஊரன் என்பதில் உள்ளுறை உவமம் உளது. பழைய உரையாசிரியர் ''பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது குலமகளிரைப் போலப் பொதுமகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவான் என்பதாம்'', என இவ்வுவமையைப் பொருத்திக் காட்டியுள்ளார். பூ தலைமகட்கும் புலால் பரத்தைக்கும் சுட்டாதல் கருதத்தக்கது. 'யாணர் ஊரன்' என்றது ஒத்த புது வருவாய் உடையவன் என்பதால் இரண்டையும் சமமாகக் கருதுகின்றவன் இன்பம் துய்த்தற்கு என்பதும் பெறப்படுகிறது. அதனாலேயே 'யாணர் ஊரன்வாழ்க' என்னும்போது, இக்கொடுமையுடைய தலைவன் தீங்கின்றி வாழ்க என வாழ்த்த நேர்கிறது. திருமண மக்களை வாழ்த்துவது போன்றதன்று இது!

'பாணனும் வாழ்க' என்பதில் தொக்கி நிற்கின்ற கேலி, கிண்டல், குத்தல், எல்லாம் உணரத்தக்கன' என்ற இவருடைய கூடுதல் விளக்கம் பழைய உரையாசிரியரைத் தழுவியது. அதுவே விவாதத்துக்கு உரியது. ஏனெனில் ''பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது, அதை ஒட்டிக் குலமகளிரைப் போலப் பொதுமகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவான் என்பதாம்'' என்ற விளக்கமே விவாதத்துக்கு உரியது. ஏனெனில் பாட்டில் பூவும் புலாலும் ஒத்தன என்பதற்கான குறிப்பு இல்லை. எனவே அதை ஒட்டிய விளக்கமும், உள்ளுறை வகையும் விவாதத்துக்கு உரியவையாய் ஆகிவிடுகின்றன.

மேலும் தமிழண்ணல் ''பாணன் வாழ்க'' என்பதற்குப் பரத்தையைத் தேடி அடையத் துணைநிற்கும் பாணன் வஞ்சகச் செயல் காரணமாகத் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாகி அழியப் போகிறானே என்பதால் ஐயோ பாணனும் வாழ்க என்று அத்தெய்வத்திடம் வேண்டிக்கொண்டிருந்தோம் என்பது தோழி கூற்றின் உட்கருத்தாகும்' (ப. 84) என்று கூறுவது அவருடைய இலக்கிய அறிவு காரணமாகக் கொடுத்த விளக்கமே தவிர உள்ளுறைப் பொருளோடு இணைத்துக் கொடுத்த விளக்கம் அல்ல.

இந்தப் பாடல் வேட்கைப் பத்து என்ற தலைப்பில் உள்ள முதல் பாடல். தாய் அரசன் வாழ்க என விரும்பத், தலைவி ஊரன் வாழ்க பாணனும் வாழ்க என்று வேண்டுகிறாள். தலைவி அப்படி வாழ்த்தக் காரணம் அவள் வாழ்க்கையில் சிக்கல் இருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது. இங்கு ' ஊரன் வாழ்க' என்று மட்டும் கூறாமல் யாணர் (புது வருவாய் ) ஊரன் என்பதால் பணக்காரன் என்பது தெளிவு. அதற்கு மேலாகப் 'பாணனும் வாழ்க' என்னும்போது, அதற்குக் கூடுதல் காரணம் இருக்கவேண்டும். அதுதான் பாணர்கள் தலைவன் பரத்தைமைக்குக் காரணமாக இருப்பவர்கள் என்பது தமிழண்ணல் விளக்கத்தாலும் அறியலாம் என்றாலும், பாட்டின் வழியாக அந்தப் பொருளை எப்படி பெறுவது என்பதுதான் முக்கியம். 'சினைய சிறுமீன்' என்பதால் உள்ளுறை உவமமாகக் கொண்டு உவமேயமாகத்

தலைவி கருப்பமாய் இருப்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அதே முறையில் நனைய காஞ்சி (பூக்களை உடைய காஞ்சி) என்பதையும் பொருள் கொள்ளலாம். அதனால் தலைவன் பரத்தையை நாடுதலுக்கான காரணம் (தலைவியின் கருப்பமே) உள்ளுறையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆகும். உரிப்பொருளில் 'பாணனும் வாழ்க' என்று கூறுவதற்குக் காரணம் தலைவன் பரத்தைமைக்குப் பாணன் துணை போகக் கூடாதே என்பதுதான். தலைவன் பரத்தமைக்குக் காரணம் கருப்பொருள் உள்ளுறை உவமம் மூலம் (தலைவியின் கருப்பம்) உணர்த்தப்பட்டிருக்கிறது.

கருப்பொருள் உள்ளுறை உவமமாக அமைந்து, உரிப்பொருளில் கூறிய கருத்து முழுமை பெற உதவுவதால் உடனுறைவதாகக் கொள்ளப்பட்டு உடனுறை உவமம் என்று அழைக்கப்பட்டாகக் கருதலாம்.

## முடிவுரை

இங்குச் சில உதாரணங்களே காட்டப்பட்டுள்ளன. அவ் விளக்கங்களும் மேலும் விவாதிக்கப்பட வேண்டும். மேலும் சங்க இலக்கியத்திலிருந்து புதிய சான்றுகள் தேடிக் கண்டுபிடித்து விவாதித்தால்தான் அடிப்படைக் கருத்தில் ஒற்றுமை ஏற்பட முடியும்.[5]

## குறிப்புகள்

1. 'The word, *uTanurai* literally means co-existence. It is the implied similie through the force of co-existence with the natural object..... The co-existence of the tree and the herione is noted as *uTanurai*, i.e. residing together. By the telling the co-existence, another sense implied becomes evident' (Kandaswamy p.40).

2. 'Normally in the regular type of *uLLurai*, the flora (and also fauna being the *karupporuL*) presented in the poem have a regular correpsondence with the concerned persons who are not mentioned it. The flowers and plants suggested the persons in the background. But in the above illustration, the *punnai* being the only *karupporuL* does not intend a parallel person, though its realtionship to the heroine is overtly expressed' (Kandaswamy, p. 41).

3. 'Since there are some other sutras wholly devoted to the concept of *iraicci*, (the symbolic sense), *uTanurai*......does not require to be classified under *iraicci*' (Kandaswamy, p.41).

4. 'In *uTanurai*, the hidden sense exists within the subject of the poem'. (Marudanayakam, p.38).

5. கட்டுரையைப் படித்துக் கருத்துரைத்த பேரா. க. இராமசாமி (செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை) அவர்களுக்கு என் நன்றி.

## துணைநூல்கள்


1. இரவிச்சந்திரன்,தி.கு. 2011. தொல்காப்பியமும் ஃப்ராய்டியமும் (அழகியல் இணைநிலைகள்), அலைகள் வெளியீட்டகம், சென்னை.

2. இராகவையங்கார்,ரா.1993. குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

3. சண்முகம், செ.வை. 2003. கவிதைக் கட்டமைப்பு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

4. '' 2010. 'சிறப்பு உள்ளுறை', தமிழியல். தொகுதி. 77. பக். 75,124.

5. சாமிநாதையர்,உ.வே.(பதிப்பர்).1937, குறுந்தொகை, 3ஆம் பதிப்பு, சென்னை, 1955.

6. சிவலிங்கனார், ஆ. 1985. தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும், தமிழ்க் கல்வி இயக்ககம், சென்னை.

7. தமிழண்ணல், 1985. சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்) சோலை நூலகம், மதுரை.

8. '' 1986. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் உள்ளுறை . மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

9. '' ஒப்பிலக்கியப் பார்வையில் சங்க இலக்கிய ஒளிச்சுடர்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

10. பாலசுந்தரம்,ச. 1989. தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம்,II (களவியல், கற்பியல்).

11. '' பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல்), தாமரை வெளியீட்டகம், தஞ்சை.

12. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உரையாசிரியர்) 2004. நற்றிணை மூலமும் உரையும், நியூ நெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

13. மீனாட்சிசுந்தரன், தெ. பொ.1981.தமிழ் இலக்கிய வரலாறு சங்க காலம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

14. முத்துச்சாமி, க. 1994. தொல்காப்பியத்தில் குறிப்புப் பொருள், அன்னம்(பி) லிட். சிவகங்கை.

15. Kandasamy, S.N.2005. 'The Concept of Ullurai in the poetics of Tolkāppiyam, *Journal of Tamil Studies*, Vol. 67. 33-56.

16. Marudanayakam, P. 2004. 'Poetry of Indirection: Tolkāppiyar and Sangam poets'. PJDS. Vol. 14.1. 29-48.

# வழக்குச்சொல் வட்டாரங்களும் வட்டார வழக்கு அகராதிகளும்

*ச. மனோகரன்*

உலகச் செம்மொழிகளுள் ஒன்று தமிழ் என்பதோடு வாழும் செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பது தமிழ் மொழியின் தனித்தன்மையையும் காலத்தால் அழியாது நிற்கும் அதன் தொடர்ச்சியையும் தெளிவுபடுத்துகின்றது. இலக்கண இலக்கியப் பாரம்பரியத்தின் தனித்தன்மையோடு, இலக்கண இலக்கியப் பாரம்பரியங்கள் இன்று வரை அழியாது மேலும் சிறப்படைந்து காலங்காலமாய் வாழும் மொழியாகத் தமிழ்மொழி உள்ளது. திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்தமொழியான தமிழ், காலப்போக்கில் எத்தனையோ மொழிகளின் தொடர்புகளையும் எத்தனையோ பண்பாடு-கலாச்சாரங்களின் தொடர்புகளையும் கொண்டிருந்தாலும், தன்னுடைய தனித்தன்மையையும் இலக்கண இலக்கியப் பாரம்பரியத்தையும் இழக்காது கட்டிக்காத்து, அந்தந்தக் காலக்கட்டத்திற்கு உரிய மாற்றங்களைத் தன்னகத்தே கொண்டு தன் இளமையும் செழுமையும் மாறாது விளங்குவதால் சுந்தரம் பிள்ளையவர்கள் தம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில்

> "ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
> சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனப் பாடியுள்ளார்கள். தமிழ்மொழியின் சிறப்புப் பற்றிக் கூறுகின்றபொழுது தன்னுடைய கடந்த காலத்தை வரலாற்றுப் பதிவுகளின் மூலமாக உணர்த்தும் தமிழ்மொழி இன்றைய காலக்கட்டத்தில் தற்கால உலகை எதிர்நோக்கி வலம்வருவதோடு ஏனைய செம்மொழிகள் போல் மடிந்துவிட மறுத்து விட்டது என்கின்றார் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் *(1955, மறுபதிப்பு 1961: 31)*[1]. தமிழ்மொழியின் வரலாறு எந்த ஆண்டிலிருந்து தொடங்குகிறது என்பதை நம்மால் அறுதியிட்டுக் கூற இயலாது. இராமாயணம், மகாபாரதம் போன்ற மிகப் பழமையான வடமொழி இலக்கியங்களில் தமிழர்களைப்பற்றியும் அவர்களுடைய மொழி, பண்பாடு பற்றியும் பல குறிப்புகள் காணப்படுவதால் தமிழ்மொழி இந்த வடமொழி இலக்கியங்களின் காலத்திற்கு முற்பட்ட மொழி என்பது தெளிவு. இன்றைய காலக்கட்டத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் பழமையான சான்று கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் ஆகும். தொல்காப்பியருக்கு முன்

அகத்திய முனிவரால் கி.மு.6 அல்லது 7ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஓர் இலக்கண நூல் இருந்ததைப் பிற்கால இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் காட்டும் மேற்கோள்களால் அறிய முடிகிறது. ஆனால் அகத்திய முனிவரால் எழுதப்பட்ட இலக்கண நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. மேலும், தொல்காப்பியர் தம்முடைய இலக்கண நூலில் என்ப, என்மனார், என்மனார் புலவர் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் தமக்கு முன் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர்கள் இதுபோன்ற கருத்துக்களைக் கூறியுள்ளார்கள் என வெளிப்படுத்துகின்றார். இத்தகைய சொற்களை அவருடைய இலக்கண நூலில் 250க்கும் மேற்பட்ட நூற்பாக்களில் கையாண்டுள்ளார் (வரதராசன், 1972:6). இத்தகைய சொற்களின் மூலம் தொல்காப்பியர் தமக்கு முன்பிருந்த இலக்கண ஆசிரியர்களின் கூற்றை ஒப்புக்கொண்டு அதன்படியே தம்முடைய கருத்தைக் கூறுகின்றார் என்பது அறிஞர்களின் கருத்து.

தொல்காப்பியர் செய்யுள்களில் கையாளப்படும் வழக்குகள் பற்றிக் குறிப்பிடும்பொழுது:

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
-தொல். பொருள். அகத்திணை - 990

எனக்கூறுவதன் மூலம் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு எனத் தமிழ்மொழியின் வழக்கினை இரண்டாகப் பாகுபடுத்துகின்றார். மேலும் சொற்களை வகைப்படுத்தும் பொழுது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைகளாகப் பிரிக்கின்றார்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே
- தொல். சொல். எச்சவியல்-880

அவற்றுள்
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே
- தொல்.சொல். எச்சவியல் - 881

ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறுபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
இருபாற்று என்ப திரிசொல் கிளவி
- தொல்.சொல் .எச்சவியல் -882

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப்பினவே திசைச் சொல் கிளவி
- தொல்.சொல். எச்சவியல் -883

வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே
- தொல்.சொல்.எச்சவியல் -884

தமிழகம் எனப்படுவது தமிழ்மொழி பேசப்படும் பகுதிகளைக் குறிப்பதாகும். இப்பகுதிகள் சேரர், சோழர், பாண்டியர் எனும் மூவேந்தர்களால் ஆளப்பட்டதை

**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு**

-தொல். பொருள். செய்யுளியல் - 1336

எனக்கூறுவதன் மூலம் அறியலாம். ஆனால், திசைச்சொற்களைப் பற்றிக் கூறும்பொழுது "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்" என 12 வகை நிலங்களாகக் கூறுகின்றார். நன்னூலாசிரியர் பவணந்தியார் இதனைச் "செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்" (*நன்னூல், சூத்திரம்-273*) என்பதன் மூலம் தொல்காப்பியரின் கூற்று மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் இந்தப்பன்னிரு நிலங்களைத்

**தென்பாண்டி குட்டங் குடங் கற்காவேண்பூழி**
**பன்றியருவா அதன் வடக்கு - ஒன்றாய**
**சீதம் மலாடு புன்னாடு செந்தமிழ் சேர்**
**ஏதமில் பன்னிருநாட் டெண்**

எனக்கூறுகின்றார். இப்பன்னிரு நாடுகள்: பொங்கர்நாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு என்பனவாகும். உரையாசிரியர்களின் விளக்கங்களின் அடிப்படையில் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரன் அவர்கள் (1965:196) இந்தப் பன்னிருவகை நிலத்திற்கே உரிய சொற்களின் உதாரணங்களைக் கொடுத்துள்ளார்கள். கி.பி. 11ஆம் நூற்றாண்டில் வீரசோழியம் எனும் இலக்கண நூலை எழுதிய புத்தமித்திரர், தமிழகத்தில் பேச்சுவழக்கு மூலம் வேறுபடும் மூன்றுவகையான நிலப்பகுதிகளாகிய கொங்கு (கொங்கு நாடு), காவேரி (சோழ நாடு), பாலாறு (பல்லவ நாடு) ஆகிய பகுதிகளை அடையாளம் காட்டியுள்ளார் (மீனாட்சிசுந்தரன், 1965:194).

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சிறுமியர் (சிறுபெண்கள்), தெழித்தல் (பிரித்தல்), பனித்து (பனிகொண்டு) போன்ற சொற்களைக் குடநாட்டு வழக்குச் சொற்களாகவும் புதைத்தல் (போர்த்துதல்) போன்ற சொற்களை மலைநாட்டு வழக்காகவும் கருதுகின்றார். உரையாசிரியர்களால் திசைச்சொற்களாக வருவனவாகக் கருதப்படும் சொற்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| பெற்றம் (பசு) | - | தென்பாண்டி நாடு |
| தள்ளை (தாய்) | - | குட்ட நாடு |
| ஞெள்ளை (நாய்) | - | குட்ட நாடு |
| அச்சன் (தகப்பன்) | - | குட நாடு |
| கையர் (ஏமாற்றுக்காரன்) | - | கற்கா நாடு |
| எலுவன் (நண்பன்) | - | சீதநாடு |

| | | |
|---|---|---|
| இருளை (பெண்ணின் நம்பிக்கைக்குரியவள்) | - | சீதநாடு |
| தந்துவை (தாயின் சகோதரரின் மனைவி) | - | சீதநாடு |
| ஞமலி (நாய்) | - | பூலிநாடு |
| பாழி (சிறுகுளம்) | - | பூலிநாடு |
| செறு (வயல்) | - | அருவாநாடு |
| கேணி (சிறுகுளம்) | - | அருவாநாடு |
| குட்டை (குறுணி-ஓர் அளவை) | - | அருவா வடதலை நாடு |

(சேதுப் பிள்ளை, 1974: 32). பாண்டிய நாட்டின் தலைநகரமாக விளங்கிய மதுரை மாநகரில் இருந்த தமிழ்ச் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சொற்கள் செந்தமிழ் எனவும், பிற வட்டாரங்களில் பேசப்படும் அந்தந்த வட்டார வழக்குகள் கொடுந்தமிழ் எனவும் சங்ககாலத்தில் கருதப்பட்டன.[2] மேலும் பாண்டியநாடு செந்தமிழ் நாடாகவும், பாண்டிய நாட்டுப் பகுதிகளில் இருந்து கிழக்குத் தொடர்ச்சி மலையாலும் மேற்குத் தொடர்ச்சி மலையாலும் இயற்கையாகவே பிரிக்கப்பட்டிருந்த 12 நாடுகள் கொடுந்தமிழ் பேசப்படும் நாடுகளாகவும் கருதப்பட்டன.[3]

தொல்காப்பியர் சமுதாயக் குழுக்களைக் 'குடி' என்றே குறிப்பிடுகின்றார். ஒருவரின் குடி அவர் பிறந்த சமுதாயக்குழுவால் முடிவு செய்யப்படுகிறது. இதையே

பிறப்பே குடிமை.......

-தொல்.பொருள். மெய்ப்பாட்டியல்-1219

என்கின்றார். சாதி என்ற சொல்லை இரண்டு இடங்களில் மட்டும் கையாண்டுள்ளார்.

நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய

-தொல்.பொருள். மரபியல் : 1542

நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே

-தொல்.பொருள். மரபியல் 1563

ஆனால் சமூகக்குழுக்களை உயர்ந்தோர், ஒப்போர், இழிந்தோர் என மூன்று நிலைகளில் பிரித்துக்காட்டுகின்றார். சொல்லதிகார எச்சவியலில்

ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய -தொல். சொல். எச். 927

அவற்றுள்

ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே -தொல். சொல். எச். 928

தாவென் கிளவி யொப்போன் கூற்றே -தொல். சொல். எச். 929

கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே
-தொல். சொல். எச். 930

இதன் பொருளாவது ஈயென் கிளவி இரக்கப்படுவோனின் இழிந்தவிரவலன் கூற்றாம். தாவென் கிளவி அவனோடொப்பான் கூற்றாம். கொடுவென் கிளவி அவனினுயர்ந்தவன் கூற்றாம் (கணேசையர், சொல்லதிகாரம், 1955 - மறுபதிப்பு 2007:414).

சங்க இலக்கியப் பாடல்கள் மொத்தம் 2,381 ஆகும். இவற்றுள் பெயர் தெரிந்த புலவர்கள் 473 பேர். இதில் பெண்பாற் புலவர் முப்பதின்மர் பெயர்கள் தெரியவருகின்றன.

> பாடிய புலவர்களுள் சிலர் நகரங்களைச் சார்ந்தவர்கள். பலர், சிற்றூர்களைச் சார்ந்தவர்கள். கற்பிக்கும் ஆசிரியர், பொன் வாணிகர், ஆடை வாணிகர், மருத்துவர், தச்சர், சோதிடர், பொற்கொல்லர், கொல்லர், சேனைத்தலைவர், அமைச்சர், பாணர், கூத்தர் முதலாகப் பல்வேறு தொழில் செய்து வாழ்ந்தவர்கள் புலவர்களாகப் பாடியுள்ளனர். அரசர்களாக, அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்து புலமை பெற்றுப் பாடியவர்கள் முப்பத்தொருவர்

(வரதராசன், 1972:48). மேலும், சங்ககாலப் புலவர்கள், பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது பல சமூகங்களைச் சேர்ந்தவர்கள். அந்தணர்கள், வேளிர்கள், பாணர்கள், பறையர்கள் எனத் தமிழ்மொழி பேசும் பல சமூகங்களைச் சேர்ந்தவர்களாகையால் இவர்களின் பாடல்களில் அவர்கள் வாழ்ந்த நாட்டின் வழக்குகளும், அவர்களின் சமூகத்தின் வழக்குகளும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஆனால், அத்தகைய ஆய்வுகள் இன்றுவரை நடத்தப்படவில்லை. இப்படிப்பட்ட பலதரப்பட்ட புலவர்களால் தமிழ் வளர்க்கப்பட்டதன் விளைவாக அது ஒரு செழுமை மிகு மொழியாக உருவெடுத்தது எனலாம். தமிழ்மொழி பிற மொழிகளிலிருந்து மாறுபட்டுத் தனித்தன்மையோடு விளங்குவதற்கு முக்கியக் காரணம், சமஸ்கிருமும் ஏனைய வட இந்திய மொழிகளும் திராவிட மொழிகளும். அந்தணர் எனும் ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களால் வளர்க்கப்பட்டது போல் அல்லாது பலதரப்பட்ட வட்டாரங்களைச் சார்ந்த பலதரப்பட்ட தொழில்களைப் புரிந்து வாழும் பல சமூகங்களைச் சார்ந்த மக்களால் வளர்க்கப்பட்ட காரணத்தால் அதன் தனித்தன்மையை இழக்காது எல்லா வட்டாரங்களையும் சமூகங்களையும் தொழில்களையும் உள்ளடக்கிய சொற்களால் வளமிக்க மொழியாக உருவெடுத்துள்ளது என்பது தமிழறிஞர் பவானந்தம் பிள்ளை (1925:vi) அவர்களின் கருத்தாகும்.[4]

எழுத்துவழக்கும் பேச்சுவழக்கும் ஒரே காலக்கட்டத்தில் வழக்கில் இருந்தாலும் வட்டாரங்களாலும் சமூகத்தாலும் தொழிலாலும் மதத்தாலும்

பிரிந்து வாழ்ந்த தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்திக் காட்டியது இலக்கியவழக்கு அல்லது எழுத்துவழக்கு எனப்படும், எல்லாத்தரப்பட்ட மக்களுக்கும் பொது நிலையில் இருந்த வழக்காகும். இப்படியொரு பொதுவழக்கு இருந்திராவிட்டால் பன்னிரு நாடுகளைச் சார்ந்த வழக்குகள் காலப்போக்கில் தனித்தனி மொழியாக உருவெடுத்திருக்கும். எனவே தமிழகம், தமிழர்கள் என்ற மொழி, பண்பாட்டுக்கூறுகளைச் சங்ககாலம் முதல் தற்காலம் வரை அடையாளங்காட்டிக் கட்டிக்காத்த பெருமை இலக்கிய வழக்கு அல்லது எழுத்துவழக்கையே சாரும்.

பேச்சுவழக்கு என்பது ஐரோப்பியர்களின் காலம் வரை ஆய்வுக்கும் எழுத்துவழக்கிற்கும் அப்பாற்பட்ட ஒரு வழக்காகவே இருந்து வந்தது. கி.பி. 16ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர்களின் வருகைக்குப்பின் பேச்சுவழக்கிற்கென்று ஒரு தனியிடம் கொடுக்கப்பட்டு, மொழியியல் ஒரு தனித்துறையாக நிறுவப்பட்ட பின்பு பேச்சுவழக்கும் பேச்சுவழக்கின் கூறுகளான வட்டாரவழக்கு, சமுதாயவழக்கு, தொழில்வழக்கு போன்ற வழக்குகள் மொழியியல் ஆய்வின் முக்கியமான அங்கமாகத் திகழ்கின்றன. தமிழின் பேச்சுவழக்கிற்கும் எழுத்துவழக்கிற்கும் இடையில் ஒரு நீண்ட ஆழமான இடைவெளி உள்ளது. தமிழின் எழுத்துவழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி மாத்தாயு (Mathews, *1942:992)*[5] எனும் அறிஞர் இவ்வாறாகக் கூறுகின்றார்: மாதக்கணக்கில் இலக்கண இலக்கியங்களைப் படித்த ஒரு வெளிநாட்டினர் மக்கள் பேசும் மொழியைக் கேட்கும்பொழுது எதுவுமே அவர்களுக்குப் புரிவதில்லை. கிராமப் புறங்களில், வயல்களில், கடைத்தெருக்களில் மற்றும் சாலைகளில் மக்கள் பேசும் மொழி தாங்கள் கற்ற மொழிதானா என்று திகைக்க வைக்கிறது.

ஐரோப்பியர்களின் வருகை தமிழ்மொழி ஆய்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியது எனலாம். கிறித்தவ மதத்தைத் தமிழர்களிடையே போதிக்க விரும்பிய ஐரோப்பியப் பாதிரிமார்கள், மக்களை நேரடியாக அணுக விரும்பினர். அவ்வாறு நேரடியாக அணுகுவதற்குப் பேச்சுவழக்கைப் பயன்படுத்துவதே சிறந்த வழியாகக் கருதினர். எனவே மக்களோடு நெருங்கிப் பழகி அவர்கள் பேசும் மொழி வழக்கினை அப்படியே கற்கத்தொடங்கினர். இவ்வகை ஆய்வுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஹென்றி ஹென்றிக்ஸ் (Fr. Henry Henriquez *-1520-1600)* எனும் போர்த்துக்கீசிய பாதிரியார் ஆவார். இவர் 1546ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாள் இந்தியாவுக்கு வந்தார். இவருடைய வருகைக்கு முன் தூய பிரான்சிஸ் சேவியர் (St. Francis Xavier) அவர்கள் கி.பி. 1546இல் தற்பொழுதுள்ள தூத்துக்குடி மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடி தொழில் புரிந்து வரும் பரதர் அல்லது பரதவர் இன மக்களிடையே தொண்டாற்றிக்கொண்டு கிறித்தவ மதத்தைப் போதித்துக் கொண்டிருந்தார். அதே பகுதிக்கு வந்து தூத்துக்குடிக்கு அருகேயுள்ள புன்னைக்காயலில் தங்கியிருந்த ஹென்றி ஹென்றிக்ஸை

(Fr. Henry Henriquez) பரதவ மக்களிடம் பழகி அவர்களுடைய பேச்சுத்தமிழைக் கற்று அதன் மூலம் கிறித்தவ மதத்தைப் போதிக்குமாறு தூய பிரான்சிஸ் சேவியர் அறிவுரை கூறினார். அதன்படி பரதவ மக்கள் பேசும் பேச்சுத்தமிழைக் கற்று அதை ஆதாரமாகக் கொண்டு கி.பி. 1549ஆம் ஆண்டு இலக்கணம் எழுதத்தொடங்கி, கி.பி. 1552இல் அதை எழுதி முடித்தார். பின்னர், 1565இல் அதைத் திருத்தி எழுதினார். இவரைப் பின்பற்றிக் காஸ்பர் த அகுய்லர் (Fr. Gasper da Aguilar- 1588-1648) மேலும் ஒரு விரிவான இலக்கணத்தை எழுதினார். ஆனால் இவர்களால் எழுதப்பட்ட இலக்கண நூல்கள் கைப்பிரதிகளாகக் கிறித்தவப் பாதிரிமார்களின் பயன்பாட்டில் மட்டும் இருந்து வந்தன.

டச்சு நாட்டைச் சேர்ந்த மத போதகர் பிலிப்பஸ் பால்டியஸ் (Philippus Baldeaus-1632-1672) எழுதிய இலக்கண நூல் கி.பி. 1672இல் கேரளாவின் அம்பலக்காடுவில் இருந்த அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டது. ஐரோப்பிய மொழியில் எழுதப்பட்டு வெளிவந்த முதல் தமிழ் இலக்கண நூல் இதுவே ஆகும். இவ்வாறு பேச்சுவழக்கு ஆய்வுகளுக்கு வித்திட்ட போர்த்துக்கீசிய, டச்சுப் பாதிரிமார்களைப் பின்தொடர்ந்து மற்ற ஐரோப்பியப் பாதிரிமார்களும் தமிழ்மொழியின் பேச்சுவழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மையமாக வைத்துத் தங்களின் இலக்கண, அகராதி நூல்களை எழுதத் தொடங்கினர். முதல் தமிழ்-போர்த்துக்கீசிய அகராதியைத் தந்தை அந்தெம் த பிரோயன்கா (Fr. Antem de Proenca) எழுதினார். கி.பி. 1679இல் கொச்சிக்கு அருகில் உள்ள அம்பலக்காடுவில் இருந்த அச்சுக்கூடம் மூலமாக இந்நூல் வெளியிடப்பட்டது. அதன் பின்னர், கி.பி. 1712இல் பர்தோல்மியஸ் ஸீகென்பல்க் (Bartholmeus Ziegenbalg) என்பவர் ஓர் அகராதியை உருவாக்கினார். இது அச்சிடப்படாமலேயே இருந்துவிட்டது. கி.பி. 1728இல் தந்தை கான்ஸ்டாண்டினஸ் ஜோஸப் பெஸ்கி (Fr. Constantinus Joseph Beschi) இலத்தீன் மொழியில் தமிழுக்கு ஓர் இலக்கண நூல் எழுதினார். இது 1806இல் கிறிஸ்டோபர் ஹென்றி ஹோஸ்ட் (Christopher Hentry Horst) என்பவரால் ஆங்கிலத்தில் "Grammar of the Common Dialect of the Tamil called கொடுந்தமிழ் composed for the use of the missionaries of the Society of Jesus" எனும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. பின்பு 1855இல் இறைத்தந்தை ஜி.யு.போப் (Rev. G.U. Pope) அவர்கள் "A Tamil Hand-Book or Full Introduction to the Common Dialect of that Language on the Plan of Ollendorf and Arnold, for the use of foreigners learning Tamil, and of Tamilians learning English; with copious vocabularies (Tamil-English and English-Tamil)" எனும் நூலை எழுதினார்கள்.

அகராதியியல் தமிழ் தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளை மிகவும் சிரமப்பட்டுப் படித்துத் தெரிந்துகொண்ட கிறித்தவர்களையே சாரும் என்கின்றார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

*(1926-1934:35).*[6] *முதல் மலபார் - ஆங்கிலம் அகராதி 1779 லும், முதல் ஆங்கிலம் - மலபார் அகராதி 1786 லும் ஜான் பிலிப் பேப்ரிஸியஸ் (*John Phillip Fabricius*) என்பவரால் எழுதப்பட்டன. பின்னர் 1826இல், இவர் ஜான் கிறிஸ்டோபர் பிரெய்தௌப்டுடன் சேர்ந்து இலக்கிய மற்றும் பொதுப்பேச்சுத்தமிழ் அடங்கிய 9,000 சொற்களைக் கொண்ட அகராதியை வெளியிட்டார். ஜே.பி.ராட்லர் (*J.P. Rottler*) 1830இல் தமது தமிழ் - ஆங்கில அகராதியை நான்கு பகுதிகளாக வெளியிட்டார். இவருடைய அகராதியை அடியொற்றித்தான் இறைத்தந்தை எம்.வின்ஸ்லோ (*Rev. M. Winslow*) தம்முடைய அகராதியை 1869இல் வெளியிட்டார். இந்த அகராதியின் விரிவான அகராதிதான் இறைத்தந்தை பி.பெர்சீவல் (*Rev.P.Perceival*), இறைத்தந்தை எல்.ஸ்பௌல்டிங் (*Rev. L. Spaulding*), இறைத்தந்தை எஸ். ஹச்சிங்ஸ் (*Rev. S. Hutchings*) ஆகிய மூவரும் சேர்ந்து வெளியிட்ட 67,000க்கும் மேற்பட்ட சொற்களைக் கொண்ட தமிழ் - ஆங்கில அகராதியாகும். இந்த அகராதி இலக்கியச் சொற்களையும் பேச்சு வழக்குச்சொற்களையும் கொண்ட ஐரோப்பியப் பாதிரிமார்களால் உருவாக்கப்பட்ட அகராதிகளுள் மிகப்பெரியதாகும். தற்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழ்ப்பேரகராதி (1926-1934, ஏழு தொகுதிகள்) 1,24,000 சொற்களைக் கொண்டது. இந்த அகராதியிலும் இலக்கியச்சொற்கள் மட்டுமல்லாது, வட்டார, சமூக, தொழில் வழக்குச்சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கிய வழக்குகள் தவிர எந்தெந்த வழக்குகளைச் சார்ந்த சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதன் விவரங்கள் பின்னிணைப்பு Iஇல் கொடுக்கப்பட்டுள்ளன. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்ப்பேரகராதியிலும் (தேவநேயப் பாவாணர், 1985) பேச்சுவழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. க்ரியா வெளியிட்டுள்ள 'தற்காலத் தமிழ் அகராதி', தமிழ்-தமிழ்-ஆங்கிலம் (2008) விரிவாக்கப் பதிப்பில் 21,000 சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 1,700 சொற்கள் இலங்கைத் தமிழ் வழக்குச்சொற்களாகும். கிரியாவின் அகராதியில் (2008: xxxii)*

> *கிராமப்புறத்தில் வாழும் மக்களும் நவீனத் தமிழ்ச் சமூகத்தின் அங்கம் என்ற உண்மையை உள்ளடக்கியிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை முறையில் பயன்படுத்தப்படும் முக்கியமான சொற்கள் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திற்கோ ஒரு சமூகத்திற்கோ உரியவையாக இல்லாமல் இருந்தால் அவையும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன*

*எனக் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் குறிப்பிட்டதொரு வட்டாரவழக்குச் சொற்கள், குறிப்பிட்டதொரு சமூக வழக்குச்சொற்கள் இந்த அகராதியில்*

இடம்பெறவில்லை என்பது தெளிவு. இதுவரை வெளிவந்துள்ள அகராதிகள் தமிழின் "பொதுப்பேச்சுத்தமிழ் வழக்குகளில்" உள்ள சொற்களை மட்டும் அங்கீகரித்துள்ளன. வட்டார, சமூக, தொழில் வழக்குச்சொற்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

தொழில் கலைச்சொல் அகராதியில் 1858இல் டி.எஸ்.வீராசாமி முதலியாரால் "The Builder's vocabulary in English and Tamil, showing the names of the component parts of buildings, bridges, & c, and of the various descriptions of materials, labour and tools employed in their construction" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அகராதியே முதல் கலைச்சொல் அகராதியாகும் (ஜேம்ஸ், 2000:844).

வட்டாரவழக்கு ஆய்வுகளில் மௌரிஸ் பிலிப்ஸ் (Maurice Phillips) என்பவரால் 1873இல் "Tamil in the Salem district: A report prepared for the Madras Government" (*Indian Antiquary*, Vol. 2:223-228) எனும் தலைப்பில் வெளிவந்த ஆய்வும், ஏ.ஸி.பர்னெல் (A.C.Burnell) என்பவரால் 1876இல் "Specimens of South Indian dialects - Tamil of Tanjore" எனும் தலைப்பில் வெளிவந்த ஆய்வும் முன்னோடி ஆய்வுகளாகும். பேச்சுத்தமிழில் உள்ள சமுதாயவழக்குக் கூறுகளை 1670ஆம் ஆண்டிலேயே தந்தை அந்தோனியோ த பிரயோங்க (Fr. Antem de Proenca) அவர்கள் அடையாளங்காட்டியுள்ளார்கள். தமிழ் பேசும் பிராமணர்கள் தங்களின் பேச்சு வழக்கில் சமஸ்கிருத மொழியினைக் கலந்து பேசி மற்ற மக்களின் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டு நிற்பதை எடுத்துக்காட்டியுள்ளார் (ஸ்டீபன், 2006:69).[7] ஜூல்ஸ் பிளாக் (Jules Block) 1910இல் "Castes et dialects en tamoul" எனும் தலைப்பில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரை தமிழ்ச் சமுதாய மொழியியல் ஆய்வுகளில் ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளது. ஆர்.பி.சேதுப்பிள்ளையின் பாண்டியநாட்டுக் கிளைமொழி (Pandya Dialect of Tamil - 1949), செட்டிநாடும் தூயதமிழும் (Chettinad and pure Tamil - 1960) போன்ற ஆய்வுகள் தமிழ் வட்டார மொழிகளைச் சங்ககால நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பனவாக அமைகின்றன. அவர்களின் இலக்கியத்தமிழும் பேச்சுத்தமிழும் (Tamil Literary and Colloquial - 1939, 1944-1945, 1953) பற்றிய ஆய்வுகள் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கும் ஆய்வுகளாகும்.

மொழியியல்துறை இந்தியப் பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்ட பின்பு தமிழ்மொழியின் வட்டார, சமூக, தொழில் வழக்குகள் பற்றிய பற்பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுகலைப்பட்ட ஆய்வுகளாகவும், பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதி உதவியுடன் பல திட்ட அறிக்கைகளாகவும் பல ஆய்வுகள் நடத்தப்

பட்டுள்ளன. இவை தவிரக் கேரளப் பல்கலைக்கழகம் (திருவனந்தபுரம்), டெக்கான் கல்லூரி (பூனா) (Deccan College-Poone), மத்தியப் பல்கலைக்கழகம் (ஹைதராபாத்) (Central University - Hyderabad), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள தமிழ் மக்கள் அல்லாது கேரளா, கருனாடகம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் போன்ற யூனியன் பிரதேசங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தில் தமிழ்மொழி பேசும் பழங்குடி மக்களாகிய காணிக்காரன், முதுவன், கொல்லிமலை மலையாளி, கல்வராயன்மலை மலையாளி, பச்சைமலை மலையாளி, பழியன், எரவல்லன் ஆகிய பழங்குடி மக்களின் பேச்சுவழக்குகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பேச்சுமொழிகளும் ஆராயப்பட்டுள்ளன. வெளிநாடு வாழ் தமிழர்களின் தமிழ்மொழி பற்றிய ஆய்வுகளில் இலங்கை முதலிடம் வகிக்கிறது. இலங்கை தவிர மலேசியா, சிங்கப்பூர், பிஜி, மௌரிஸியஸ், இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் மொழிவழக்கைப் பற்றியும் மொழிச்சூழல் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு மொழி பேசும் மக்கள் பரந்து விரிந்து கிடக்கும் பல வட்டாரங்களில் அல்லது பல நாடுகளில் பல சமூகங்களாகப் பிரிந்து பற்பல தொழில்களில் ஈடுபட்டு வருவார்களேயானால் அவர்கள் வாழும் வட்டாரம் அல்லது நாடுகளின் அடிப்படையிலும் சமூகப்பிரிவுகளின் அடிப்படையிலும் செய்யும் தொழில் அடிப்படையிலும் அவர்களின் பேச்சுமொழியில் பல வேறுபாடுகள் காணப்படுவது மொழியின் உலகளாவிய (universal) பொதுத் தன்மையாகும். தமிழ் மொழியும் இதற்கு விலக்கல்ல. சங்ககாலம் முதல் தற்காலம் வரை தமிழ்மொழி பேசும் மக்கள் தாங்கள் வாழும் வட்டாரத்தின் அடிப்படையிலும் தாங்கள் சார்ந்த சமூகத்தின் அடிப்படையிலும் தாங்கள் செய்யும் பாரம்பரியத்தொழில் அடிப்படையிலும் பேச்சுவழக்கில் வேறுபாடுகளைக்கொண்டிருந்தாலும், இலக்கிய வழக்காலும், பொதுப் பேச்சுத்தமிழ் வழக்காலும் ஒன்றுபடுகின்றனர். ஒரு மொழி பேசும் மக்கள் பிற மொழிகள் பேசும் மக்களையும் அவர்களின் பண்பாடுகளையும் சந்திக்க நேரிடும்போது, கருத்துப்பரிமாற்றங்களுடன் மொழிக்கூறுகளும் பண்பாட்டுக் கூறுகளும் கடன்வாங்கப்படுவது இயற்கையாக அமையும் சமுதாய நிகழ்வுகளாகும். ஆனால், அத்தகைய கருத்துப் பரிமாற்றங்களிலும் மொழி, பண்பாட்டுக்கூறுகளைக் கடன் வாங்குவதிலும், பொதுவாக மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் கருத்துக்களையும், பண்பாட்டுக்கூறுகளையும் மக்கள் கடன்வாங்குவர். ஐரோப்பியர்கள் குடி பெயர்ந்து காலனி நாடுகளை

உருவாக்கிய காலந்தொட்டு இந்தநிலை மாறத்தொடங்கியுள்ளது. அறிவியல் வளர்ச்சி காரணமாகவும், இயந்திரமயமாக்குதல் காரணமாகவும் பாரம்பரியமாக மக்கள் செய்துவந்த தொழில்களை இயந்திரமயமாக்குதல் தாக்கத் தொடங்கியது. பாரம்பரியத் தொழில்நுட்பங்களும் இயந்திரத் தொழில்நுட்பங்களும் இருவேறு துருவங்களாக விளங்குகின்றன. பாரம்பரியத்தொழில் செய்த மக்களால் அதே தொழிலை மூலதனம் காரணமாக இயந்திரமயமாக்க முடியவில்லை. மேலும் பாரம்பரியத் தொழில்நுட்பமும் இயந்திரத் தொழில்நுட்பமும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத மாறுபட்ட தொழில்நுட்பங்களாகும். ஆகவே, பாரம்பரியமாக ஒரு தொழிலைச் செய்துவந்தவர்களின் சந்ததியினர் பிழைப்புக்காக வெவ்வேறு தொழில்களை நாடிச்செல்கின்றனர். இதன் காரணமாகப் பாரம்பரியத் தொழிலின் தொழில்நுணுக்கச் சொற்களும், அவைகளில் பயன்படுத்தப்பட்ட கருவிகளின் பெயர்களும், அவைகளை உபயோகிப்பதில் பயன்படும் சொற்களும் பழக்கவழக்கத்தில், உபயோகத்தில் இல்லாத காரணத்தால் மக்களின் மனதைவிட்டு விலகி அடுத்த சந்ததியினருக்கு அச் சொற்களும் அவற்றின் பொருட்களும் தெரியாத நிலை உருவாகியுள்ளது. கல்வித்துறையில் ஏற்பட்ட மாறுதல்களும், செய்தித்தாள்கள், வார-மாத இதழ்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சிப்பெட்டி, தொலைபேசி, அலைபேசி போன்ற தொலைதொடர்புச் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவை பெருமளவில் மக்களை அடைந்து ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களால் மக்கள் தங்களின் வட்டார, சமுதாய வழக்குகளினின்று வேறுபட்டு, பொதுப்பேச்சுத்தமிழைப் பெருமளவில் தங்கள் பேச்சுவழக்கில் உபயோகப்படுத்தத் தொடங்கியுள்ளனர். மேலும், போக்குவரத்து மேம்பாட்டால் ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவர் பிற வட்டாரங்களுக்கு எளிதாகவும், குறுகிய காலத்திற்குள்ளும் போய்வரும் வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. இத்தகைய போக்குவரத்துச் சாதனங்களால், திருமண உறவுமுறையில் மணமகன் மணமகளைத் தேர்ந்தெடுக்கும் தூரங்கள் (Marriage Distance) நண்டமுறையில் விரிவாக்கப்பட்டு, ஒரு வட்டாரத்தில் இருந்து வெவ்வேறு வட்டாரங்களுக்குப் பெண்கொடுப்பதும் பெண்எடுப்பதும் போன்ற சமூகச் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவர் வேலை நிமித்தமாகவும் வியாபாரம் அல்லது வேறுவகைப் பணிகளின் நிமித்தமாகவும் வெவ்வேறு வட்டாரங்களுக்குப் போய்வருவதோடு, வெவ்வேறு வட்டாரங்களில் மாதக்கணக்கிலோ, வருடக்கணக்கிலோ தனியாகவோ அல்லது குடும்பத்தினருடனோ தங்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இத்தகைய காரணங்களால், வெவ்வேறு வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் தத்தம் வட்டாரவழக்குகளினின்று மாறிப் பொதுப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தும் மொழிச்சூழல் உருவாகியுள்ளது. எனவே வட்டாரவழக்குச் சொற்களும் பயன்பாட்டிலிருந்து அழிந்துவரும் நிலை உருவாகியுள்ளது.

வட்டாரங்கள் எனப்படுவது சங்ககாலத்தில் சேரர், சோழர், பாண்டியர் எனும் மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பெரும்பிரிவுகளாகவும்,

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்துவகை நிலப்பாகுபாட்டாலும், வேளிர்கள் எனப்படும் சிற்றரசர்களால் ஆளப்பட்ட தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலைநாடு, புனல்நாடு எனும் 12 சிறு நாடுகளாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன. பிற்காலச் சோழர்காலங்களிலும் பல்லவர் காலங்களிலும் விஜயநகரப்பேரரசர்கள் காலங்களிலும் இவ் வட்டாரங்களின் எல்லைகள் பல காலக்கட்டங்களில் மாற்றப்பட்டுள்ளன. ஆங்கிலேயர்கள் காலத்தில் மாவட்டங்கள் வருவாய்த்துறை வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டன. அன்று முதல் இன்று வரை மாவட்டங்கள் பலவாறாகப் பிரிக்கப் பட்டுள்ளன. தற்பொழுது தமிழகம் 32 மாவட்டங்களாகவும் 206 வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. வட்டாரம் என்பது ஒரு நிலையான எல்லை வரம்புக்குள் இல்லாது காலப்போக்கில் மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. எனவே, மௌரிஸ் பிலிப்ஸ் (Maurice Phillips) 1873இல் ஆய்வு செய்த சேலம் மாவட்ட வழக்கும், ஏ.சி.பர்னல் (A.C.Burnell) 1876இல் ஆய்வு செய்த தஞ்சாவூர் மாவட்ட வழக்கும், இன்றைய சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களாகக் கருதமுடியாது. மேலும் சில மாவட்டங்களில் மாவட்டத்திற்குள்ளேயே தனித்தனி வட்டாரங்கள் உள்ளன. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதிகளைப் புறத்தாய நாடு (கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும்) அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்கள் உள்ளடக்கிய பெரும்பகுதி, மீதமுள்ள பகுதி நாஞ்சில் குடியரசு என்றும் கல்குளம், விளவங்கோடு வட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் வேணாடு என அழைக்கப்படுகின்றன (ஸ்டீபன் சாம், 1994:10-11). இந் நான்கு வட்டங்களில் அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்கள் முந்தைய தென்பாண்டி நாட்டுப்பகுதிகளாகவும் கல்குளம், விளவங்கோடு வட்டங்கள் சேரநாட்டுப் பகுதிகளாகவும் கருதப்படுகின்றன. மேலும் சில வட்டாரங்கள், பல மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளன. உதாரணமாக, கொங்குவட்டாரம் என்று அழைக்கப்படும் பகுதி

> கோவை ஜில்லா முழுவதும், சேலம் ஜில்லாவில் ஓமலூர், திருச்செங்கோடு, சேலம், நாமக்கல் என்ற தாலுக்காக்களும், திருச்சி ஜில்லாவில் கரூர், குளித்தலை என்ற இரண்டு தாலுக்காக்களும், மதுரை ஜில்லாவில் பழநி, திண்டுக்கல் என்ற இரண்டு தாலுக்காக்களும் கொண்டதாக இருக்கின்றது

(கோ.ம. இராமநாதன் செட்டியார், 1987; மேற்கோள் பெருமாள் முருகன், 2000:14). மொழிவாரி வட்டாரங்களைப் பேச்சுவழக்கின் அடிப்படையில் அந்தந்த வட்டாரத்தின் பெயர்களால் கூறுவது தவறான ஒன்றாகும். களப்பணிகள் மூலம் சொற்களைச் சேகரித்து அதன் அடிப்படையில்தான் வட்டாரங்களைப் பிரிக்க முடியும். இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகளின் அடிப்படையில் பல அறிஞர்கள் ஆண்ட்ரனொவ் (Andronov, 1962), கமில்

வி.சுவலபில் (Kamil V. Zvelebil, 1964) கி.கருணாகரன் (1970), வ.அய்.சுப்பிரமணியம் (1973), கோ.சீனிவாச வர்மா (1976, 1977), சு.சக்திவேல் (1981), கே. மகாலிங்கம் (1987) தமிழகத்தைப் பேச்சுவழக்குக்கூறுகளின் உதாரணங்களோடு சில வட்டாரங்கள் அல்லது மண்டலங்களாகவும் பிரித்து உட்பிரிவுகளையும் அடையாளங் காட்டியுள்ளார்கள். இவர்களில் கமில் வி. சுவலபில் (Kamil V. Zvelebil) சென்னை, திண்டுக்கல், ஈரோடு, இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் 1960ஆம் ஆண்டுகளில் களப்பணிகள் செய்துள்ளார். இவ் வட்டார அல்லது மண்டலப் பிரிவுகளும் உட்பிரிவுகளும் முழுமையான அறிவியல் கோட்பாடுகளுடன் முழுமையான தரவுகளைக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகா. மேற்கூறிய ஆய்வறிஞர்களின் முடிவுகள் பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மண்டல/ வட்டார/உட்பிரிவுகளுக்கு எடுத்துக்காட்டுகள் பின்னிணைப்பு 3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பேச்சுமொழி ஆய்வுகளுக்கு ஐரோப்பியப் பாதிரிமார்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்தது போல் வட்டாரவழக்குச்சொல் அகராதிகளுக்கு முன்னோடியாக எழுத்தாளர் கி. ராஜநாராயணன் திகழ்கின்றார். இவர் எழுதிய வட்டார வழக்குச் சொல் அகராதி (1982) தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தின் ஒரு பகுதியான கோவில்பட்டி, விளாத்திகுளம் வட்டாரங்களில் பேசப்படும் பேச்சுவழக்கினைப் பதிவு செய்யும் அகராதியாகும். இவருடைய வட்டாரவழக்குச் சொல் அகராதியைப் பின்பற்றிப் பல எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் பல வட்டாரவழக்குச் சொல் அகராதிகளை வெளியிட்டுள்ளனர்: சண்முகம் (1990), காளியப்பா (1991), பெருமாள் முருகன் (2000), மகாலட்சுமி (2003), புலவர் மணியன் (2004), இரவிக்குமார் (2008), அ.கா. பெருமாள் (2004), ராஜன் (2004), முருகையா (2004), பழனியப்பா (2006), கண்மணி குணசேகரன் (2007), தமிழகன் (2009), இளங்கோவன் (2011). இதுவரை வெளிவந்துள்ள வட்டாரவழக்குச் சொல் அகராதிகள் பின்னிணைப்பு 5இல் கொடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை வெளிவந்துள்ள வட்டாரவழக்கு அகராதிகளில் டி. மகாலட்சுமி (2003:14) வெளியிட்டுள்ள கோவை மாவட்ட வழக்குச்சொல் அகராதியில் சொற்களைக் கீழ்க்கண்ட 11 இலக்கண வகைகளில் பிரித்துக் கொடுத்துள்ளார்:

> எ.ம.வி - எதிர்மறை வினை, ஏ.வி. - ஏவல் வினை, தொ.பெ. - தொழிற் பெயர், பெ.-பெயர், பெ.அடை-பெயரடை, பெ.எ.-பெயரெச்சம், வி.அ.பெ.-வினையாலணையும் பெயர், வி.அடை-வினையடை, வி.எ.- வினையெச்சம், வி.மு.-வினைமுற்று, வியங். வி.- வியங்கோள் வினை

பெருமாள் முருகன் (2000: 20) கீழ்க்கண்ட ஐந்து இலக்கண வகைகளை மட்டும் சுட்டிக்காட்டியுள்ளார்:

இ.சொ. - இடைச்சொல், பெ. - பெயர்ச்சொல், பெ.அ. - பெயரடை, வி. வினைச்சொல், வி.அ. - வினையடை

ஏனைய சொற்களுக்கு இலக்கணக்குறிப்புகள் கொடுக்கப்படவில்லை. பிற அகராதிகளில் சொற்களின் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதேயன்றி அவைகளின் இலக்கணக்கூறுகள் கொடுக்கப்படவில்லை. எனவே, வட்டாரவழக்கு அகராதியென்று வெளியிடப்பட்டுள்ள நூல்கள், சொற்களின் தொகுப்பேயன்றி, அறிவியல் சார் அகராதியியல் அடிப்படையில் தொகுக்கப்பட்ட அகராதிகளாகக் கருதமுடியது.

சொற்களைச் சேகரிப்பதில் ஒவ்வொரு நூலாசிரியரும் அவர்களுக்கேயுரிய வழிமுறைகளைப் பின்பற்றியுள்ளனர். பெருமாள் முருகன் முதலில் 'சேலம் மாவட்டப் பேச்சுவழக்குச் சொற்கள்' எனும் தலைப்பில் சொற்களைத் தொகுக்கத் தொடங்கியுள்ளார் (பக்.7). பொள்ளாச்சியைச் சேர்ந்த அவருடைய நண்பர் ஒருவரிடமிருந்து அந்தப் பகுதிச் சொற்களைப் பெற்றுள்ளார் (பக்.8). கொங்கு மண்டல ச்சதகம் போன்ற நூல்கள் அண்ணன்மார் சுவாமி கதை உள்ளிட்ட நாட்டுப்புறக்கதைகள் பாடல் தொகுப்புகள், கொங்கு வட்டார நாவல்கள், சிறுகதைகள் முதலியவைகளில் காணும் பேச்சுவழக்குச் சொற்களைக் குறிப்பெடுத்துள்ளார் (பக்.17). ஆனால், "குறிப்பிட்ட சாதியின் சடங்குகள் சார்ந்த சொற்களை எல்லாம் பதிவுக்கு எடுத்துக் கொள்ளவில்லை" (பக்.17). உணர்வுப்பூர்வமாகச் சாதி அடையாளங்களைத் தவிர்க்க முயன்றதை அவரே ஒப்புக்கொண்டுள்ளார். ஒரு வட்டாரத்தைச் சார்ந்த ஒரு குறிப்பிட்ட சாதியினர்களின் பேச்சுவழக்குச் சொற்கள் தவிர்க்கப்படும் பொழுது அந்தத் தொகுப்பு அந்த வட்டாரத்தை முழுமையாகப் பிரதிபலிக்காது என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும்.

கண்மணி குணசேகரன் (2007:8) சொற்கள் சேகரிப்பு முறையில்,

1. நினைவுகளிலிருந்து சொற்களைக் கொணர்ந்து எழுதுவது
2. பிறரிடமிருந்து சேகரிப்பது
3. இந்தப் பகுதி சார்ந்த இலக்கிய நூல்களிலிருந்து கண்டெடுப்பது

என மூனறு வகைகளைக் கையாண்டுள்ளார். சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த சொற்களிலிருந்து இயல்புச்சொற்கள், நாஞ்சில், கொங்கு, மதுரை, கரிசல், செட்டிநாடு அகராதிகளில் உள்ள சொற்களும் நீக்கப்பட்டு எஞ்சிய சொற்களையே தம் அகராதியில் கொடுத்துள்ளதாகக் கூறுகின்றார் (பக். 13). நடுநாடு அல்லது நடுத்திட்டு என அழைக்கப்படும் இந்தப்பகுதி கெடிலம் ஆற்றிற்கும், பெண்ணை ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இவை தற்கால கடலூர், பண்ருட்டி, திருக்கோயிலூர், விருத்தாசலம் (இன்னும் சில பகுதிகள் இருக்கலாம்?) உள்ளடக்கிய வட்டாரமாகும் (பக்.14). அனைத்து வட்டார அகராதி ஆசிரியர்களும், பொதுவாக இப்படியொரு வழிமுறைகளைத்தான் பின்பற்றியுள்ளனர். எவரும், கட்டுக்கோப்பான ஒரு வினாநிரல் மூலம் களப்பணி செய்து அகராதிகளை முடிவு செய்யவில்லை.

மேலும் வழக்குச்சொற்களைக் குறிப்பெடுத்து எழுதிக்கொள்வதிலும், வழக்கொழிந்துவிட்ட சொற்களைச் சேகரிப்பதிலும் உள்ள சிக்கல்களும் வட்டாரவழக்கு அகராதிகளை எழுதுவதில் உள்ள முக்கியமான சிக்கல்களாகக் கருதப்படுகின்றன. அழிந்துவரும் சொற்களைப் பற்றிக் கூறும்பொழுது, அ.கா.பெருமாள் (2004:20)

> நாஞ்சில் நாட்டுக் கிராமங்களிலிருந்து நாகர்கோவில் நகரத்துக்குக் குடியேறிய சாதியினர் சாதி வழக்காறுகளிலிந்து அந்நியப்பட்டுக் கொண்டு வருவது போலவே சாதிக்கே உரிமையுடைய சொற்களைத் தவிர்த்துப் பேசுவதில் கவனமாக இருக்கின்றனர்

என்கின்றார். இவ்வாறு நகரங்களில் குடியேறும் மக்கள் தங்களின் சாதிசார் சொற்களைத் தவிர்ப்பது அவர்களின் பாரம்பரியத் தொழில்சார் சொற்களெல்லாம் அழிந்து வருவதற்குக் காரணமாக அமைகிறது. இன்றைய காலக்கட்டத்தில் ஒரு வட்டாரத்திலுள்ளவர்கள் பல சமூகப் பொருளாதாரக் காரணங்களுக்காக வேறொரு வட்டாரத்தில் குடியேறும் பொழுது தங்களின் வட்டாரச் சொற்களைத் தவிர்த்துப் 'பொதுப்பேச்சுத்தமிழுக்கு' மாறி வருகின்றார்கள். இவ்வாறாக மக்கள் பிற வட்டாரங்களுக்குக் குடியேறும்பொழுது வட்டாரவழக்குச் சொற்களும் அழிந்துவருகின்றன என்பது மொழி ஆய்வாளர்களின் கருத்தாகும். இத்தகைய சூழ்நிலையில் களப்பணி மூலம் தரவுகள் சேகரிக்கப்படுவது மிகவும் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. மேலும், களப்பணிகள் சிறிய கிராமப்புறங்களில் வாழும் வயதான மக்களிடம் மட்டும் செய்யவேண்டியதும் கட்டாயமான ஒன்றாகும். இவ்வகையான, வட்டாரவழக்குச் சொற்களைச் சேகரிப்பதில் எந்தவொரு சாதியையும், தொழிலையும் ஒதுக்கிவிடாமல், வட்டாரமக்களிடையே வழங்கப்படும் பொதுவான சொற்களோடு இத்தகைய சொற்களையும் சேர்க்கும் பொழுதுதான், அது ஒரு வட்டாரத்திற்குரிய முழுமையான தகவல்களை உள்ளடக்கிய அகராதியாகவோ, சொற்தொகுப்பாகவோ அமையும் என்பதில் மாற்றுக்கருத்து எதுவும் இல்லை.

ஒரு வட்டாரவழக்குச் சொற்களின் அகராதி தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடும்பொழுது அந்த வட்டாரத்திற்குரிய அனைத்துச் சொற்களும் சேகரிக்கப்பட வேண்டும். அந்த வட்டாரத்திற்கேயுரிய சொல்லா? அல்லது வேறு வட்டாரங்களிலும் அச்சொல் பயன்பாட்டில் உள்ளதா? என்பதைத் தமிழகம் மற்றும் புதுச்சேரிகளில் உள்ள எல்லா வட்டாரச் சொற்களுடன் ஒப்பிட்டுத்தான் முடிவு செய்யமுடியும். ஆகையால், ஒரு வட்டார வழக்குச் சொல் அகராதியில் அந்த வட்டாரத்தில் உள்ள அனைத்துச் சொற்களும் இடம்பெற வேண்டும். தமிழகராதி எனத் தமிழ்மொழியின் ஒட்டுமொத்தச் சொற்களையும் சேகரிக்கும்பொழுது, ஒரு வட்டாரத்திற்குரிய சொற்கள் அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்ததாகவும், ஒரு சமூகத்தினர்க்குரிய சொற்கள்

அந்தந்தச் சமூகத்தைச் சார்ந்த சொற்களாகவும், தொழில்சார் சொற்கள் அந்தந்தத் தொழிலைச் சார்ந்த சொற்களாகவும் பாகுபடுத்தப்பட்டு, பொதுச் சொற்களிலிருந்து வேறுபடுத்திச் சுட்டிக்காட்டப்படும். ஒரு குறிப்பிட்ட சாதியினரின் வழக்குச்சொற்கள் பதிவு செய்யப்படாத பொழுது, பல முக்கியமான சொற்கள் விட்டுப்போக வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக அகம் எனும் சங்ககாலச் சொல் அகத்துக்காரர் 'கணவர், வீட்டுக்காரர்' எனும் பொருளில் ஆத்துக்காரர் எனும் சொல்லாக அந்தணர்களின் பேச்சுத்தமிழில் மட்டுமே உள்ளது. பட்டிகாணுதல் என்பது கொங்கு வேளாளர் சமூகத்தினரின் திருமணச்சடங்குகளில் ஒன்றாகும். திருமணமான புதுமணத்தம்பதியினர் திருமணமானபின் மணமகன் வீட்டின் தொழுவத்திற்குச்சென்று அவர்களின் ஆடுமாடுகளைப் பார்ப்பதே இந்தச்சடங்காகும். புரவி 'குதிரை' எனும் சங்ககாலச் சொல் புரவி எடுத்தல் எனும் சொல்லில் காணக்கிடக்கிறது. கொங்குப்பகுதியில் ஐயனார் வழிபாடு செய்யும் மக்கள் நேர்த்திக்கடனாக மண்ணால் செய்த குதிரை வடிவப் பொம்மையைக் கோவிலுக்கு எடுத்துச்செல்வர். இதையே 'புரவி எடுத்தல்' எனக்கூறுகின்றனர். மேலும், ஒரே பாரம்பரியத் தொழிலைப்புரியும் மக்கள் பல வட்டாரங்களில் வாழ்கின்றனர். அவர்கள் செய்யும் தொழில் ஒரே தொழிலாக இருந்தாலும், தொழில் செய்யும் முறைகளிலும் உபயோகிக்கும் கருவிகளிலும் வேறுபாடுகள் உள்ளன. ஒரே கருவிக்கு வேறு வேறு சொற்களும் இருக்கலாம். ஆகையால், வட்டார வழக்குச் சொற்களைத் தொகுக்கும் பொழுது அனைத்துத் தரப்பட்ட மக்களிடமும் களப்பணி செய்வது மிகவும் ஏற்றதாகும். அகராதி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆய்வறிஞரே அவருடைய விருப்பப்படி சொற்களைத் தேர்வு செய்து அவைகளை ஒரு வட்டாரத்திற்குரிய அல்லது வட்டாரத்திற்கே உரிய சொற்கள் எனத்தொகுக்கும் பொழுது மாறுபட்ட கருத்துக்கள் எழுகின்றன. இவைகளை எடுத்துக்காட்டும் விதமாகப் பெருமாள் முருகன் மற்றும் அ.கா.பெருமாள் ஆகியவர்களின் வட்டாரவழக்குச் சொல்லகராதியிலிருந்து எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## நாஞ்சில் நாட்டு வழக்குச் சொல்லகராதி-அ.கா.பெருமாள்

நாஞ்சில் நாட்டில் வழங்கப்படும் சொற்கள்

1. அவையான் - பெருச்சாளி
2. அழுக்கன் - கஞ்சன்
3. அளிக்கதவு - மரச்சட்டத்தால் ஆன கதவு
4. அறங்கூடு - படுக்கை அறை
5. கிண்டி உணர்த்தல் - சிரத்தையாகக் குடும்பக் காரியங்களைக் கவனித்தல்
6. கித்தாட்டி - மூடி மறைத்துப் பேசுதல்
7. தீயல் - நாரந்தங்காயில் தயாரிக்கப்படும் ஊறுகாய் வகைகளில் ஒன்று
8. துரக்காரர் - கோவில் நிலங்களுக்குரிய வரியை வசூலிக்கும் அதிகாரி

9. தெங்கு - தென்னை மரம்
10. பட்டி - நாய்

பிற வட்டாரங்களிலும் வழங்கப்படும் சொற்கள்

1. அவஸ்தை - வேதனை, இடையூறு
2. அழிமானம் - அழிந்ததின் மதிப்பு
3. காவு கொடுத்தல் - பலி கொடுத்தல்
4. காவோலை - நன்றாகக் காய்ந்த பனை ஓலை
5. கிடை வைத்தல் - வயல் தோட்டத்தில் ஆடுகளை அடைத்து வைத்தல்
6. கிண்டுதல் - கிளறுதல்
7. தீட்டரிசி - தவிடு நீக்கிய அரிசி
8. துப்புரவு - சுத்தம்
9. தூக்கு - ஒரு எடை
10. தெம்மாடி - கையாலாகாதவன்

## கொங்கு வட்டாரச் சொல்லகராதி - பெருமாள் முருகன்

### கொங்கு வட்டாரத்தில் வழங்கப்படும் சொற்கள்

1. ஆரியக்கல் (பெ.) - திருவல், மாவு அரைக்கப்பயன்படும் கல்
2. ஆரியம் (பெ.) - கேழ்வரகு
3. இட்டேரி (பெ.)- நிலங்களுக்கிடையே எல்லையாக அமைக்கப்பட்ட பெரிய வரப்பு
4. இஸ்கார் (பெ.) - தேவையற்ற தொல்லை
5. ஒகடியம் (பெ.) - கேலி, கிண்டல்
6. ஒட்டு (பெ.) - பால் கறக்கும் மாடு
7. கொடும்பு (பெ.) - செடியைச் சுற்றி அடைக்கும் கூண்டு போன்ற வேலி
8. கொப்பு (பெ.) - வயல்களுக்குள் செல்லும் சிறிய வாய்க்கால்
9. சாலு (பெ.) - நீர் நிறைத்து வைக்கும் பெரிய தவலை
10. சிட்டி மூங்கில் (பெ.) - கனமும் வலுவும் கொண்ட மூங்கில்

### பிற வட்டாரங்களிலும் வழங்கப்படும் சொற்கள்

1. ஆத்தா (பெ.) - அப்பாவின் அம்மா
2. ஆயா (பெ.) - பாட்டி
3. ஆரக்கால் (பெ.) - மாட்டுவண்டிச்சக்கரத்தில் சுற்று வட்டத்தையும் மையத்தையும் இணைக்கும் கட்டை
4. இந்த வாட்டி (வி.அ.) - இந்த முறை
5. இளம்பயிர் (பெ.) - முளைத்துச் சிறிது நாள்களே ஆன பயிர்

6. ஏறுவெயில் (பெ.) - காலையிலிருந்து நண்பகல் வரை அதிகரித்துக் கொண்டு வரும் வெயில்
7. ஏனம் (பெ.) - பாத்திரம்
8. கொழி (பெ.) - கையால் மசால் போன்றவற்றைச் சலித்தல்
9. சாவக்கட்டு (பெ.) - பந்தயம் கட்டிச் சேவல்களைச் சண்டையிட வைத்தல்
10. சித்த (பெ.அ.) - சிறிது

வட்டார வழக்கின் சொற்களைச் சேகரிக்கின்ற பொழுது நல்லசொல்: கெட்டசொல், நல்லசொல்: கொச்சைச் சொல், வசைச்சொல் என வேறுபடுத்தாது அனைத்துச் சொற்களுமே பொருளோடு வரும் மொழிச்சொற்கள் என்ற அடிப்படையில் சேகரிக்கப்பட வேண்டும். சொற்களைச் சேகரிப்பவர் தம்முடைய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டுச் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதே மொழியியலின் அடிப்படைக் கொள்கை. வசைச்சொற்றொடர்களில் கூடப் பண்டைக்காலச் சொற்கள் பயன்படுவதைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகள் உணர்த்துகின்றன.

சல்லிக்காசு பெறமாட்டான்
தம்படிக்குப் பிரயோஜனமில்லாதவன்

இவ் இரண்டு சொற்றொடர்களிலும் வரும் சல்லி, தம்படி என்ற சொற்கள் வழக்கொழிந்து விட்ட பண்டைக் கால நாணயங்களின் பெயர்களாகும். நாணயங்களும் அவற்றின் பயன்பாடும் அழிந்துவிட்டாலும், இத்தகைய சொற்றொடர்களில் இன்றும் இச்சொற்கள் அந்தந்த நாணயத்தின் மதிப்போடு பயன்பாட்டில் உள்ளன. மேலும் சொற்களுக்கு வெளிப்படையாக உணர்த்தும் பொருளோடு, உட்பொருளும் இருக்கலாம். அத்தகைய சொற்களுக்கு இரண்டு வகையான பொருள்களையும் கொடுக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

| சொல் | வெளிப்பொருள் | உட்பொருள் |
|---|---|---|
| நாமம் போடுதல் | ஒருவரின் நெற்றியில் வைணவ அடையாளமாகப் போடப்படும் நாமம் | வாங்கிய பொருளையோ பணத்தையோ திரும்பக் கொடுக்காமல் ஏமாற்றுதல் |
| மொட்டையடித்தல் | தலையில் உள்ள முடிகளை எடுத்துவிடுதல்<br>ஒன்றும் இல்லாமல் செய்தல் | ஒருவருடைய பொருள் பணங்களை ஏமாற்றி விட்டு |
| தலை மொழுகுதல் | இறப்பு நடந்த வீட்டில் கடைப்பிடிக்கப்படும் ஒரு சடங்கு | ஒருவரைத் தன் உறவுமுறை அல்லது நட்புறவிலிருந்து அடியோடு நீக்கி விடுதல் |
| கைகழுவுதல் | கைகளில் படிந்திருக்கும் அழுக்கைக் கழுவிச் சுத்தம் செய்தல் | ஒருவேலையின் பொறுப்பிலிருந்து இடையில் விலகிவிடுதல் |
| முட்டை | பறவைகளின் முட்டை | சுழியன், 0 |

